**தலைப்பு – 114- போக்குவரத்து அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி முதல் ஒவ்வொரு தலைப்பிற்குமான கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்பட்டுள்ளன.

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்**

| தலைப்பு | திணைக்களங்கள் |
|---|---|
| 306 | இலங்கை புகையிரதத் திணைக்களம் |
| 307 | மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் |

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

போக்குவரத்து அமைச்சு மற்றும் அதன் கீழான திணைக்களங்களில் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் கீழே காட்டப்பட்டுள்ள திகதிகளில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

| தலைப்பு | அமைச்சு / திணைக்களம் | முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 114 | போக்குவரத்து அமைச்சு | 2015 யூன் 05 |
| 306 | இலங்கை புகையிரதத் திணைக்களம் | 2015 யூன் 15 |
| 307 | மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் | 2015 திசெம்பர் 18 |

**1.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணைக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக்கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**(அ) மொத்த ஏற்பாடு மற்றும் செலவினம்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 81,134 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 76,337 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சு மற்றும் ஒவ்வொரு திணைக்களத்தினதும் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 46 மில்லியனிற்கும் ரூபா 4,438 மில்லியனிற்கும் இடைப்பட்ட அளவில் அதாவது தேறிய நிதி ஏற்பாட்டில் 01 சதவீத்திற்கும் 18 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 114 | 25,010 | 20,572 | 4,438 | 11.14 |
| 306 | 53,692 | 53,379 | 313 | 0.58 |
| 307 | 2,432 | 2,386 | 46 | 1.89 |
| மொத்தம் | **81,134** | **76,337** | **4,797** | **5.91** |

## 2.2 வருமானக் கணக்குகள்

### மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களினால் 2014 ஆம் ஆண்டில் 04 வருமான தலைப்புக்களிற்காக ரூபா 13,937 மில்லியனான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 15,200 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 90 சதவீதத்திலிருந்து 115 சதவீதம் வரையான வீச்சில் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தன. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமானக் குறியீடு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மிகை/(பற்றாக்குறை) மதிப்பீட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை/(பற்றாக்குறை) | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 20.01.01.00 | 5,129.00 | 5,909.31 | 780.31 | 15.21 |
| 10.03.02.14 | 1,150.00 | 1,114.85 | (35.15) | (3.06) |
| 10.03.07.04 | 58.00 | 51.94 | (6.06) | (10.45) |
| 10.03.02.14 | 7,600.00 | 8,123.80 | (523.80) | (6.89) |
| மொத்தம் | 13,937.00 | 15,199.90 | 1,262.90 | 9.06 |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களிற்காக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 11401 | 8.00 | 3.00 | 2.90 | 3.90 | 34.00 | 16.85 |
| 30601 | 540.00 | 410.39 | 290.00 | 308.86 | 1,800.00 | 779.65 |
| 30701 | 28.00 | 24.00 | 17.00 | 19.00 | 125.00 | 100.00 |

### 2.3.2 களஞ்சிய முற்பணக் கணக்குகள்

அமைச்சின் கீழ் திணைக்களத்திற்குரிய களஞ்சிய முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 30602 | 2,200 | 2,180 | 1,200 | 1,272 | 6,602 | 6,313 | 1,000 | - |

## 2.4. கட்டுநிதிக் கணக்கு

அமைச்சின் கீழ் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 383 மில்லியனாக இருந்தது.

## 2.5 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் கீழ் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வைப்புக் கணக்கின் மீதி ரூபா 329 மில்லியனாக இருந்தது.

## 2.6 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் போக்குவரத்து அமைச்சினதும் அதன் கீழான திணைக்களங்களினதும் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, களஞ்சிய முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாக தயாரிக்கப்பட்டிருந்தது. அம்முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியிலிருந்து 5 ஆம் பந்தி வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. தலைப்பு 114 – போக்குவரத்து அமைச்சு

## 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | கணனி மற்றும் கணனி உதிரிப் பாகங்களின் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

(இ) மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு — நிதிப்பிரமாணம் 454(2)

## 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

------------------------------------

**பாதீட்டு முரண்**

------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் 02 செலவின விடயங்களுக்காக ரூபா 5,000,000 ஆன நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அமைச்சினால் அதில் ரூபா 3,870,713 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 1,129,287 கூட்டுத்தொகையான அதாவது ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதிஏற்பாட்டில் 22.59 சதவீதமான ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அமைச்சிற்கு திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தினால் கட்டுநிதி வழங்கப்படாமையால் இச்சேமிப்புக்கள் ஏற்பட்டதாக ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) 03 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 25,000,000 தொகையான தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) 22 செலவின விடயங்களுக்கு மிகை ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டின் 05 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது.

## 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

------------------------------------------------------------------------------------------------------------------------------------

11401 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,035,256 ஆக இருந்ததுடன், அம்மீதிகள் 01 ஆண்டு முதல் 16 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து இருந்து வந்த போதிலும், அந் நிலுவை

மீதிகளை அறவிடுவதின் பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலைமையில் காணப்பட்டது.

(ஆ) 06 உத்தியோகத்தர்களிடமிருந்து 02 முதல் 03 ஆண்டுகளுக்கு குறைந்த காலப்பகுதியிலிருந்து நிலவி வரும் ரூபா 469,303 ஆன கடன் மீதி மற்றும் உத்தியோகத்தரொருவரிடமிருந்து ஓராண்டிற்கு மேற்பட்ட இரண்டு ஆண்டகளுக்கு குறைந்த காலமாக இருந்து வரும் ரூபா 129,901 என மொத்தம் ரூபா 599,204 கூட்டுத்தொகையான நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு மீளாய்வாண்டிலும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் வெளிப்படுத்தப்பட்டன.

### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தல்

2014 ஒக்தோபர் 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2015 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் அவ் அறிக்கை 2015 மே 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வு அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த 37 பொருள் உருப்படிகளுக்குரிய 160 பொருட்கள் பற்றாக்குறை தொடர்பாக நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் வெளிநாட்டு நிதியீட்டத்தின் கீழ் மாத்தறை – கதிர்காமம் புதிய புகையிரத வீதி நிர்மாண செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது. அதன் கடன் உடன்படிக்கையின் பரிகாரம் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 36,166 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 11,123 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இவ்வெளிநாட்டு உதவி நிதியீட்ட செயற்திட்ட நிர்மாண ஒப்பந்தம் China National Machinery Import Corperation நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் 8.3 ஆம் நிபந்தனையின் பிரகாரம் ஒப்பந்த நிகழ்ச்சித்திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 யூலை மாதம் வரையிலும் ஓராண்டிற்கு குறைந்த காலப்பகுதியில் 06 சந்தர்ப்பங்களில் ஒப்பந்த நிகழ்ச்சித்திட்டங்கள் திருத்தம் செய்யப்பட்டிருந்தன. 2014 யூலை 24 ஆந் திகதி அதாவதுது கணக்காய்வு திகதி வரை ஆறாவது முறையாக திருத்த நிகழ்ச்சித்திட்டங்கள் ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகார் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த திகதி வரையிலும் 12 அடிப்படை உருப்படிகளல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ் ஒப்பந்த நிகழ்ச்சித்திட்டங்கள் அடிப்படை ஆய்வொன்றில்லாமல் தயாரிக்கப்பட்டிருந்தமையால் நிகழ்ச்சித்திட்டங்கள் திருத்தம் செய்ய வேண்டியேற்பட்டது.

## 3.6 உள்நாட்டு நிதியீட்டத்தின் கீழ் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதில்

போக்குவரத்து அமைச்சினால் புதிய புகையிரத வீதிகள் நிர்மாணத்திற்காக வேறான பிரிவொன்று தாபிக்கப்பட்டு வருடக் கணக்காக நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், எந்தவொரு செயற்திட்டமும் தொடர்ச்சியாக செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | செயற்திட்டம் | 2011 - 2014 காலப்பகுதியில் | | சதவீதம் | 2014 ஆம் ஆண்டின் போதான செயற்பாடுகள் |
|---|---|---|---|---|---|
| | | நிதிஏற்பாடு | செலவினம் | | |
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | % | |
| (i) | ஹொரனை – கொட்டாவை புகையிரதப் பாதை நிர்மாணம் | 38.0 | 02.7 | 07 | செயற்படுத்தப்பட்டமைக்கான கணக்காய்விற்கு சான்றுகள் காணப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **(ii)** | குருநாகல், தம்புள்ளை ஊடாக ஹபரா்ண புகையிரதப் பாதை நிர்மாணம் | 118.9 | 04.7 | 04 | - மேற்படி - |
| **(iii)** | கொழும்பு, அம்பாந்தோட்டை, களணிவெலி புகையிரதப் பாதை நிர்மாணம் | 110.0 | -- | -- | - மேற்படி - |
| **(iv)** | மதவாச்சி திருகோணமலை புகையிரதப் பாதை நிர்மாணம் | 53.0 | 10.7 | 20 | - மேற்படி - |
| **(v)** | வெல்லவாய, பிபில, பதுளை புகையிரதப் பாதை நிர்மாணம் | 40.0 | 01.7 | 04 | - மேற்படி - |
| **(vi)** | திருகோணமலை – மாஹோ – புத்தளம் புகையிரதப் பாதை நிர்மாணம் | 16.0 | -- | -- | - மேற்படி - |

## 3.7 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

### (அ) சிக்கனமற்ற கெமரா வாடகை கொடுப்பனவு

போக்குவரத்து அமைச்சின் ஊடகப் பிரிவு பயன்படுத்தப்படுகின்ற Sony – HVR 1000 P என்ற வீடியோ கெமரா திருத்தியமைப்பதற்காக ரூபா 198,048 செலவிடப்பட்டிருந்தது. அக்காலப்பகுதியில் வேறொரு கெமராவொன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 303,105 (நாளொன்றுக்கு ரூபா 2,350 வீதம்) செலவிடப்பட்டிருந்தது. காணப்படும் கெமராவை அடிக்கடி பழுதுபார்ப்பதற்கு நேர்கின்றமையால் அதற்காக அதிகமான காம் எடுத்தல் மற்றும் அக்காலப்பகுதிக்காக வாடகைக்கு கெமராவொன்றை பெற்றுக்கொள்வதற்கு அதிக பணம் செலவிடப்படுகின்ற அடிப்படையில் புதிய கெமராவொன்றை கொள்வனவு நடவடிக்கை எடுக்காமையால் மேற்குறித்த சிக்கனமற்ற செலவினமொன்றை செய்வதற்கு நேர்ந்திருந்தது.

### (ஆ) வீடியோ பிரதிகளுக்காக சிக்கனமற்ற விகையில் ரூபா 180,620 செலவழித்தமை

போக்குவரத்து அமைச்சின் ஊடக மேவுகைளை காட்சிப்படுத்தல் அவ்வாறு காட்சிப்படுத்தப்பட்ட வீடியோக்களை பிரதியெடுத்தல் என்பன தனியார்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அச்செலவினங்களில் அதிகளவானவை (90 சதவீதமான அளவு வீடியோக்களை காட்சிப்படுத்துவதற்காக அல்லாது வீடியோ

பிரதிகளை எடுப்பதற்காக செலவிடப்பட்டிருந்தது. டீவீடீயில் பதிவு செய்யக்டிய கணனியொன்றைப் பயன்படுத்தி DVC, CD மற்றும் DVD போன்ற பிரதிகள் பெற்றுக்கொள்ளப்படாமல் கடந்த 04 மாதங்கள் அளவில் மாத்திரம் வீடியோ பிரதிகள் எடுப்பதற்காக ரூபா 180,620 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 3.8 முகாமைத்துவ நலிவுகள்

(அ) அமைச்சின் ஒவ்வொரு பிரிவிற்கும் 28 நேரடித் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டிருக்கையில் 2014 ஆம் ஆண்டின் போது பொது தொலைபேசி இணைப்பு ஊடாக பெற்றுக்கொண்ட அழைப்புக்களுக்கு ரூபா 339,139 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நேரடி தொலைபேசி மற்றும் பொது தொலைபேசி செலவினங்களுக்கு மேலதிகமாக எந்தவொரு உத்தியோத்திரின் கீழ் காணப்படாத 03 தொலைபேசிகள் ( பாதுகாப்பு, தொழில்நுட்ப மற்றும் திட்டமிடல் பிரிவு) என்பவற்றிற்காக ரூபா 276,263 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன்அத்தொலைபேசிகளின் மாதாந்த செலவினம் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட தொலைபேசி செலவினத்தையும் மிகைத்திருந்தது.

## 3.9 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | | | | - |
| (i) | சிரேஷ்ட நிலை | 25 | 20 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 03 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 137 | 84 | 53 |
| (iv) | ஆரம்ப நிலை | 45 | 31 | 14 |

| | | | | |
|---|---|---|---|---|
| (v) | ஏனையோர்(அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 03 | - | 03 |
| | | ----------- | -------- | ---------- |
| | மொத்தம் | 215 | 138 | 77 |
| | | ==== | ===== | ===== |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 77 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

**(ஆ) விளைவற்ற மனித வளங்கள்**

புதிய புகையிரத வீதி நிர்மாண செயற்திட்டப் பணிப்பாளர் உட்பட 10 உத்தியோகத்தர்களுக்கு 02 வருடங்களில் குறிப்பான செயற்பாடுகளைக் கையளித்து செயன்முன்னேற்றமொன்று பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் நடவடிக்கை எடுக்காமல் சம்பளமாக மாத்திரம் ரூபா 6,068,979 தொகை வழங்கப்பட்டிருந்தது.

**(இ) ஏனைய தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொண்ட மனித வளங்கள்**

அமைச்சினால் பின்வரும் தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொண்ட மனித வளங்கள் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | ஊழியர் வகை | எண்ணிக்கை | ஏனைய தரப்பினர் |
|---|---|---|---|
| (i) | அரச முகாமைத்துவ உதவியாளர் | 01 | இலங்கை புகையிரதத் திணைக்களம் |
| (ii) | அலுவலக உதவியாளர்கள் | 12 | -மேற்படி - |
| (iii) | கணனி செயற்பாட்டாளர் | 01 | இலங்கை போக்குவரத்துச் சபை |
| (iv) | சாரதிகள் | 06 | -மேற்படி - |

## 4. தலைப்பு 306 – இலங்கை புகையிரதத் திணைக்களம்

### 4.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

இலங்கை புகையிரதத் திணைக்களத்தினால் 2015 மார்ச் 31 ஆந் திகதியளவில் பின்வரும் கணக்குகள் 01 மாதததிற்கு மேற்பட்ட தாமதத்தின் பின்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| தலைப்பு/வருமானக் குறியீடு/விடய இல. | கணக்கின் பெயர் | கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்ட திகதி | 2015 மே 31 ஆந் திகதி வரையில் தாமதம் |
|---|---|---|---|
| | | | மாதம் |
| 306 | ஒதுக்கீட்டுக் கணக்கு | 2015 யூன் 22 | 02 |
| 20:01:01:00 | இலங்கை புகையிரதத் திணைக்கள வருமானக் கணக்கு | 2015 ஏப்ரல் 02 | 01 |
| 30601 | அரங்சாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணங்கள் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று | 2015 மே 07 | 01 |
| 30602 | களஞ்சிய முற்பணக் கணக்கு | 2015 மே 20 | 01 |

### 4.2 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

இலங்கை புகையிரதத் திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | கணனி மற்றும் கணனி உதிரிப் பாகங்களின் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஏஜஐ/ 2002/ 02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (இ) | கடமை தொலைபேசி பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1) |
| (ஈ) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |

### 4.3 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளித்தல்

இலங்கை புகையிரதத் திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 54 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் முன்னைய ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட 22 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் 2015 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிராததுடன் அந்த ஐய வினாக்களுக்குரிய கணிப்பீடு செய்யக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 2,046,689,870 ஆக இருந்தன.

### 4.4 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்**

செலவின விடயமென்றிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 3,200 மில்லியனாக இருந்த போதிலும் திறைசேரியிடமிருந்து தேவையான கட்டுநிதி கிடைக்காமையால் அதில் ரூபா 2,910 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 290 மில்லியன் அதாவது ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் 9 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

### 4.5 கட்டுநிதிக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 371 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக 15 பதவிநிலைத்தரமில்லாத உத்தியோகத்தர்களுக்கு 15 சந்தர்ப்பங்களின் போது

ரூபா 1,390,000 கூட்டுத்தொகையான செயல் நிமித்த கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் பதவிநிலைத்தர உத்தியோகத்தர்களுக்கு ஒரு தடவையில் வழங்கககக்கூடிய தற்செயலான கட்டுநிதி ரூபா 20,000 ஆக இருந்த போதிலும், அப்பிரமாணங்களுக்கு முரணாக ரூபா 20,000 விஞ்சி 16 சந்தர்ப்பங்களின் போது 16 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,415,000 செயல் நிமித்த கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

## 4.6 பொது வைப்புக் கணக்கு

2 வருடங்களை விஞ்சிய (காணி வைப்புக்கள் தவிர) ரூபா 135,946,260 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.7 வருமானக் கணக்கு

திணைக்களத் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 20.01.01.00 உடைய வருமான குறியீட்டின் கீழ் வருமான மதிப்பீடுகளைத் தயாரித்தல், வருமானங்களைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் பொன்ற செயற்பாடுககள் கையளிக்கப்பட்டுள்ளன. அவ்வருமானக் குறியீட்டிற்குரித்தாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) முன்னைய ஆண்டில் சேகரிக்கப்பட்ட ரூபா 5,423 மில்லியன் வருமானம் தொடர்பில் கருத்திற் கொள்ளாமல் மீளாய்வாண்டிற்காக ரூபா 5,128 மில்லியனாக வருமானம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி அளவில் அம்மதிப்பீட்டு வருமானம் ரூபா 781 மில்லியனால் அதாவது மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 15 சதவீதத்தினால் மிகைத்து வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ii) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம் ரூபா 1,571,205,201 கூட்டுத்தொகையான வருமானம நிலுவையாக இருந்ததுடன், அந்நிலுவை வருமானங்கள் 01 முதல் 52 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலவீச்சில் காணப்பட்டன.

(iii) நிதிப் பிரமாணம் 128(2) இன் பிரகாரம் வருமானக் குறியீட்டுக்குரிய அரையாண்டு நிலுவை வருமானம் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) வருமானக் குறியீட்டிற்குரித்தாக சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 21.280,520 கூட்டுத்தொகையான வருமானம் இனங்காணப்பட்டு உரிய வருமானக் குறியீடுகளுக்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் வைப்புக் கணக்கில் 01 ஆண்டு முதல் 03 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(iv) அரசாங்கத்தின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகள் என்பவற்றிற்காக கோரப்பட்டு பெற்றுக்கொள்ளப்படாத 111,027 பருவகாலநுழைவுச் சீட்டுக்களுக்காக இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 1,102,700 ஆன தண்டப்பணத்தை அறவிடுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அது 2014 ஆம் ஆண்டிற்காக ரூபா 598,400 உம் 2013 ஆம் ஆண்டிற்காக ரூபா 4504,300 உமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4.8 அரசாங்க ஊழியர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

30601 ஆம் இலக்க அரசாங்க ஊழியர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 84,842,951 ஆக இருந்ததுடன் அந் நிலுவை மீதிகள் 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகள் வரையான காலப்பகுதி கடந்திருந்த போதிலும், அந் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களப் புத்தகத்தின் படி மீதி ரூபா 678,115,631 ஆக இருந்ததுடன் திறைசேரி கணணி அச்சிடல் குறிப்புக்களின் பிரகாரம் அது ரூபா 682,293,436 ஆக இருந்தது. அதன் படி ரூபா 4,177,805 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அந்த வேறுபாடு 2004 ஆம் ஆண்டு முதல் காணப்படுகின்ற போதிலும் 2015 மார்ச் 31 ஆந்

திகதி வரையிலும் சீராக்கி சரி செய்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தனிப்பட்ட மீதி வகைப்படுத்தலின் பொழிப்பின் கூட்டுத்தொகை ரூபா 791,606,075 ஆக இருந்ததுடன், அத்திகதியில் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 779,649,041 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 11,957,034 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஈ) 19 உப அலுவலகங்களிலிருந்து மரணித்த மற்றும் ஓய்வு பெற்ற 1047 உத்தியோகத்தர்களின் ரூபா 52,238,501 தொகையான நிலுவைக் கடன் மீதி தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.5, 4.4 மற்றும் 4.5 பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து தீர்வு செய்வதற்கு திணைக்களம் எவ்வித நடவடிக்கையொன்றும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 18 உப அலுவலகங்களிலிருந்து சேவை வறிதாகிச் சென்ற 4071 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 21,417,616 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் பிரதான கடனாளியிடமிருந்து அறவிட முடியாத சந்தர்ப்பங்களின் போது அப்பணம் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம் அப்பணத்தை பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 13 உப திணைக்களங்களுக்கு இணைக்கப்பட்டிருந்து வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட 462 ஊழியர்களிடமிருந்து நிலுவைக் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10,194,343 ஆக இருந்தது. அம்மீதிகள் நீண்ட காலத்திலிருந்து முன்கொண்டு வரப்படுகின்ற போதிலும், 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v0 தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.8 ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்கத்தின் ஒரு உத்தியோகத்தர் வேறு கூட்டுத்தாபனத்திற்கு அல்லது சபைக்கு விடுவிக்கப்படுவதாக இருந்தால் அதற்கு முன்னர் பெறப்பட்ட கடன் தொகை அனைத்து பணம் மீளச் செலுத்தி தீர்வு செய்து பின்னர் சேவையிலிருந்து விடுவிக்க முடியுமான போதிலும், விடுவிக்க கூடாத போதிலும்

புகையிரதத் திணைக்களத்தின் நாவலப்பிட்டி உப புகையிரத திணைக்களத்தில் சேவையாற்றிய இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய 05 வருடங்களை விட பழமையான ரூபா 58,940 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.9 களஞ்சிய முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

இலங்கை புகையிரதத் திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் போது களஞ்சிய முற்பணக் செயற்பாடொன்று செயற்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1993 ஆம் ஆண்டு முதல் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பொருட்கள் இறக்குமதி செய்யும் போது சுங்கக் கட்டணமாக ரூபா 183,807,173 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அச் செலவினத்தை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இருப்பில் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 1993 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை தீர்வு செய்யப்படாத நிலுவைக் கடன் மீதி ரூபா 45,521,770 ஆக இருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வின் பின்னர் இனங்காணப்பட்ட ரூபா 524,062 தொகையான 11 இருப்பு உருப்படிகளின் மிகையொன்றும் பெறுமதி குறிப்பிடப்படாதிருந்த 03 இருப்பு உருப்படி மிகைகள் இருப்புக்கள் களஞ்சியத்தில் காணப்பட்டதுடன், அந்த இருப்புக்களின் மிகைப் பெறுமதி களஞ்சிய முற்பணக் கணக்கின் இருப்பு மீதிக்கு சீராக்கம் செய்ய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வின் பின்னர் இனங்காணப்பட்ட ரூபா 20,547,393,062 தொகையான 242 இருப்பு உருப்படிகள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாதிருந்த 79 இருப்பு உருப்படி உள்ளடக்கப்பட்ட அந்த இருப்பு பற்றாக்குறைகள் களஞ்சிய முற்பணக் கணக்கில் காண்பிக்கப்பட்டடிருந்த இருப்பு பெறுமதிக்கு சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. அப்பற்றாக்குறைளை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் களஞ்சிய அத்தியட்சகரினால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1998 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை வெளிநாடுகளிலிருந்து பொருட்கள் சேவைகள் கட்டளையிடப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த

போதிலும், தீர்க்கப்படாத நாணயக் கடிதங்களின் பெறுமதி ரூபா 1,030,609,935 ஆக இருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் அக்கடந்த ஆண்டுகளுக்குரிய நாணயக் கடிதங்களின் பெறுமதியைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2006 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை ரூபா 205,751,770 பெறுமதியான பொருட்கள் கட்டளையிடப்பட்டு வழங்குனருக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அப்பொருட்களிலிருந்து ரூபா 77,045,483 பெறுமதியான பொருட்கள் களஞ்சியத்திற்கு கிடைத்ததற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அப்பொருட்கள் வழங்கப்படாதிருந்த போததும் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக 1980 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதிவரையான காலப்பகுதியில் வழங்குனருக்கு ரூபா 21,078,844 ஆன முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு செலுத்தப்பட்டிருந்த முற்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு தீர்வுசெய்யப்படாதிருந்த முற்பணங்களுக்கிடையே ரூபா 5,914,962 தொகை மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த முற்பணமாக இருந்தது. இந்த முற்பணத்தைத் தீர்ப்பதற்கோ அல்லது உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கோ மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.10 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

---

### 4.10.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

---

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறறிக்கையின் பிரகாரம் இலங்கை புகையிரத திணைக்களத்தினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.10.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

---

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.11 சொத்துக்கள் முகாமைத்துவம்

இலங்கை புகையிரத திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதாளிக்கப்பட்டன.

### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்படுகின்றமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | **சொத்து வகை** | **அலகுகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| (i) | வாகனங்கள் (புகையிரத கூடங்கள்) | 135 |
| (ii) | 04 சக்கரங்கள் (புகையிரதம் கேல்) | 603 |
| (iii) | உடலுடன் கூடிய புகையிரத கூடம் | 256 |
| (iv) | புகையிரத என்ஜின்களும் | 18 |
| (v) | மோட்டார் வாகனங்கள் | 03 |

### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2014 ஒக்தோபர் 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2015 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் 2015 மே 31 ஆந் திகதி வரையிலும் அவ்வறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.12 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | **ரூபா** | |
| (i) VIII ஆம் அத்தியாயத்தின் 3.2 ஆம் பிரிவு | 371,522 | பிரதான இயந்திர பொறியியலாளர் உப திணைக்களத்தின் அலுவலக பதவியணியினருக்கு கையளிக்கப்பட்ட வழமையான கடமை மற்றும் மேலதிக கடமைககள் குறிப்பாக இனங்காணப்படாமலும் செய்த வேலை தொடர்பாக எழுத்துமூல சான்றொன்றில்லாமல் 2014 மே மற்றும் யூன் மாதங்களில் சம்பள பத்திரத்தின் மூலம் மேலதிக நேர வேலையாக ரூபா 371,522 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அம்மீண்டெழும் செலவினம் மூலதனச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) VIII ஆம் அத்தியாயத்தின் 5.6 ஆம் பிரிவு | 960,341 | 68 புகையிரத காப்பாளர்கள் வாரத்திற்கு வேலை செய்யக்கூடிய சாதாரண மணித்தியாலங்களைக் கழிக்காமல் அக்காலப்பகுதியின் போது ரூபா 960,341 முற்பணமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்

---------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 94 | 355,690,000 | வீதி மற்றும் வேலை உப திணைக்களத்தினதும் சமிக்ஞை மற்றும் தொலைத்தொடர்பு உப திணைக்களத்தினால் மேற்கொள்ளப் பட்டிருந்த ஏற்பாட்டை மிகைத்து கடப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (ii) | நிதிப்பிரமாணம் 137(5) | 3,201,139 | நானுஓயா மாவட்ட பொறியியல் அலுவலகத்தினால் வழங்குனருக்கு கொடுப்பனவு செய்யும் போது பொருட்கள் பெற்றுக்கொண்டமைக்கான உறுதிப்படுத்தலின்றி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப்பிரமாணம் 139(4) | 2,485,075 | கொடுப்பனவு செய்யப்படாடதாக உறுதிப்படுத்தாமல் அல்லது உறுதிச்சீட்டில் கையொப்பமிடாமல் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது சம்பளம் மற்றம் படிகள் வழங்கப்பட்டிருந்தன. |
| (iv) | நிதிப்பிரமாணம் 143(3)(டீ) | 4,633,145 | புகையிரத திணைக்களத்தின் புகையிரத நிலைய அதிபர்களால் நாளாந்தம் அனுப்பப்படுகின்ற ரூபா 4,633,145 ஆன வருமானம் கிடைத்ததாக பிரதான கணக்காளரினால் பற்றுசீட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நிதிப்பிரமாணம் 177(1) மற்றும் (3) | 17,150 | சேகரிக்கப்படுகின்ற அரசின் பணம் நாளாந்தம் மீள் நிரப்பல் அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும், பிரதான நிதி உத்தியோகத்தரின் ஆலோசனையின் பிரகாரம் நாளாந்த வருமானத்தில் பிரயாணச் செலவினமாக ரூபா 17,150 |

| | | | |
|---|---|---|---|
| | | | தொகை புகையிரத நிலைய அதிபரால் 2015 சனவரி மாதத்தின் போது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |
| (vi) | நிதிப்பிரமாணம் 185(பீ) | 550,901,439 | காசேட்டின் பெறுவனவுப் பதிவுகள் மற்றும் ஏனைய கணக்கு புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள செலவுப் பதிவுகள் அவ்வப்போது ஒப்பிடப்படுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க்பபட வேண்டிய போதிலும், தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது 05 புகையிரத நிலையங்களில் அவ்வாறு ஒப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| (vii) | நிதிப்பிரமாணம் 187(3) | 167,322,277 | சிறாப்பர் பிரிவி உத்தியோகத்தர்களால் சம்பளம் மற்றும் முற்பணக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக நாட பூராவும் செல்வதால் சிறாப்பர் பிரிவிற்கு நாளாந்தம் கிடைக்கப்பெறும் பணப் பொதிகள் 1807 அளவில் கணக்கிடப்படாமல் பாதுகாப்பு பெட்டகத்தில் வைத்திருக்கப்பட்டிருந்தது. |
| (viii) | நிதிப்பிரமாணம் 751 | 160,118 | கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் களங்சியத்திற்கு கிடைத்து அவை உறுதிச்சீட்டுக்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் உரிய கொடுப்பனவிற்காக அந்த உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2014 ஆம் ஆண்டின் கொள்வனவிற்காக களஞ்சியப் பொறுப்பளாரின் இருப்புப் பதிவேட்டில் பொருட்கள் கிடைக்கப்பெற்றதாக உறுதிப்படுத்தாமல் பணம் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ix) | நிதிப்பிரமாணம் 762 மற்றும் 763 | 110,421,146 | 2014 ஆம் ஆண்டில் ஒரே தடவையில் 1,000 சொலிட் வீல் கொள்வனவு |

| | | | |
|---|---|---|---|
| | | | செய்யப்பட்டிருந்தன. இதனால் அப்பொருள் உருப்படிகளின் கூடிய இருப்பு மட்டம் 200 அலகுகளை விஞ்சி கொள்வனவு இடம்பெற்றிருந்தது. |
| (ஆ) | சனாதிபதி செயலகத்தின் சுற்றுநிரூபம் | | |
| | 2012 ஏப்ரல் 09 ஆந் திகதிய PCMD/AD/2/1/1/26 ஆம் இலக்க சுற்றுநிரூபத்தின் (ஆ) பந்தி | | புகையிரதத் திணைக்களத்தில் அறவிடப்படாத கடன் மீதிகளை அறவிடுவது தொடர்பாக நிறுவனத் தலைவர் எவ்வித பொறுப்புடன் இருந்தமைக்கு கணக்காய்வு ஐய வினாக்களுக்கு அனுப்பியுள்ள பதிலின் படி கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை. |
| (இ) | திறைசேரி சுற்றறிக்கை | | |
| (i) | 2010 ஒக்தோபர் 29 ஆந் திகதிய 5/2010 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | 511,451 | கொழும்பிற்கு வெளியே பிரதேசங்களில் பதவியணியினர் சம்பளம் அவர்களின் வங்கிக் கணக்கிற்க அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. சிறாப்பர் பதவியணியினர் மூலம் கொடுப்பனவு செய்தமையால் அவர்களுக்கு மேலதிக நேரம், பிரயாணச் செலவினம், புகையிரத பெட்டிகளை ஒதுக்குதல் போன்ற செயற்பாடுகளுக்காக சனவரி மாதத்தின் போது மாத்திரம் ரூபா 511,451 தொகையான மேலதிகச் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ii) | 2012 மார்ச் 05 ஆந் திகதி DM3/C2/43/PR/vi/I ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களச் | 2,083,610 | சமிக்ஞை மற்றும் தொலைத்தொடர்பு செயற்திட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உட்படாத தொழில்நுட்ப உதவியாளர், எழுதுனர் மற்றும் ஒட்டுனர்களாக 155 பேர் இணைக்கப்பட்டு 2013 ஆம் ஆண்டின் போது மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவுகளாக நிறைவேற்றப்பட்ட |

| | | |
|---|---|---|
| சுற்றறிக்கை | | வேலைகள் தொடர்பாக எழுத்துமூல உறுதிப்படுத்தலொன்று இல்லாமல் ரூபா 2,083,610 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஈ) புகையிரத பொது முகாமையாளரின் பொது அறிவுறுத்தல் கோவை | | |
| (i) புகையிரத பொது முகாமையாளரின் பொது அறிவுறுத்தல் கோவையின் 2.6 ஆம் பந்தி | 630,000 | தலைமையகததில் பிரவேசச் சீட்டு வழங்கல் பிரிவிடமிருந்து கிடைக்கும் பிரவேசசீட்டுக்கள் புகையிரத AB 68 இருப்பு பேரேட்டில் பதிவு செய்யாமல் புகையிரத நிலையங்களுக்கு வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன. |
| (ii) திணைக்கள பொது அறிவுறுத்தல் கோவையின் 02 ஆம் அத்தியாயத்தின் 3.15.2 ஆம் பந்தி | 272,860 | மருதான புகையிரத நிலையத்தில் ரூபா 272,860 பெறுமதியான 9252 பிரவேசசீட்டுக்கள் இருப்பொன்று காணாமல் போனமை தொடர்பில் நவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.13 வெளிநாட்டு செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் வெளிநாட்டு நிதியளித்தலின் கீழ் 05 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. அச்செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,319,507,488 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இவ்வெளிநாட்டுச் செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்வதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

### (அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல்

இலங்கை புகையிரதத் திணைக்களத்தால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்கப் பட்ட திகதி | பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி | பூர்த்தி செய்த திகதி | 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செலவினம் | தாமத்திற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | | | | ரூபா மில்லியன் | |
| மடு – தலை மன்னார் புகையிரத வீதி பாதை நிர்மாணம் | 149.50 | 2011/03/29 | 2013/09/29 | 2014/09/29 | 5,124.34 | விலை முரண்கள் அங்கீகரிக்கப்படாமை குருணிக் கற்கள் வழங்குவதில் தாமதம், சீரற்ற காலநிலை |
| பளை முதல் காங்கேசன்துைற வரையான புகையிரதப் பாதை நிர்மாணம் | 149.34 | 2012/06/14 | 2014/06/13 | -- | 7,092.18 | அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் நிர்மாணித்தலில் தாமதம் மற்றும் குருணிக் கற்கள் வழங்குவதில் தாமதம், |

**4.14 வங்கிக் கணக்குச் செயற்பாடுகளில் குறைபாடுகள்**

**(அ) வங்கி இணக்கக் கூற்று தயாரிப்பதிலான நீண்ட தாமதம்**

07 வங்கிக் கணக்குகளில் வங்கி இணக்கக் கூற்று தயாரிப்பதில் நீண்ட தாமதம் அவதானிக்கப்பட்டது.

| | 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தயாரிக்கப்படாதிருந்த வங்கி இணக்கக் கூற்றுக்களுக்குரிய ஆண்டும் மாதமும் |
|---|---|
| (i) | 2014 திசெம்பர் |
| (ii) | 2014 திசெம்பர் |
| (iii) | 2014 செப்தெம்பர் |

| | |
|---|---|
| (iv) | 2014 திசெம்பர் |
| (v) | 2014 திசெம்பர் |
| (vi) | 2014 சனவரி முதல் திசெம்பர் வரை |
| (vii) | 2014 சனவரி முதல் திசெம்பர் வரை |

**(ஆ) செயலற்ற வங்கி கணக்கு**

---------------------------------------------

திணைக்களத்தினால் பேணப்பட்டிருந்த நடைமுறைக் கணக்கொன்று 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக செயலற்று காணப்பட்டது. 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இவ்வங்கிக் கணக்கில் ரூபா 3,026,878 ஆன மீதியொன்று வங்கிக் கூற்றின் பிரகாரம் காண்பிக்கப்பட்ட போதிலும், அதற்குரிய சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**(இ) சீராக்கப்பட வேண்டிய மீதிகள்**

--------------------------------------------------------

புகையிரத திணைக்களத்தினால் 2014 நவம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்க கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த சீராக்கல்கள் தொடர்பான பகுப்பாய்வின் படி வெளியிடப்பட்ட தகவல்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சீராக்கல் தொடர்பான விபரம் | 06 மாதங்களிற்கு மேல் 01 ஆண்டிற்கு குறைந்த<br>ரூபா |
|---|---|---|
| (i) | வழங்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவற்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 566,418 |
| (ii) | இனங்காணப்படாத வரவுகள் | 63,744 |
| (iii) | இனங்காணப்படாத செலவுகள் | 2,637 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

வழங்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவற்காக சமர்ப்பிக்கப்படாத ரூபா 35,276 ஆன காசோலைகள் வழங்கிய திகதியை மாற்றி வங்கி இணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தன. காலாவதியான காசோலைகள் தொடர்பில் நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.15 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

---

இலங்கை புகையிரத திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்தன. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) திறைசேரி நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் புகையிரத திணைக்களத்தின் நாளாந்த தேவைப்பாட்டிற்காக 7,000 மெட்ரிக் தொன் தண்டவாளங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 1,473 மில்லியனான தண்டவாளங்கள் பளை - காங்கேசன்துறை செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு வழங்கப்பட்ட ரூபா 149 மில்லியன் பெறுமதியான தண்டவாளங்கள் அச்செயற்திட்டத்திற்கு கிடைக்கப்பெற்றதை உறுதிப்படுத்துவதற்கு போதியளவு சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) ஓமந்தையிலிருந்து பளை வரையான புகையிரத பாதை மீள் நிர்மாண செயற்திட்டத்தின் புகையிரத வீதிக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்த ரூபா 80 மில்லியன் பெறுமதியான 6,849 சிலிப்பர் கட்டைகள் பழுதடைந்திருந்தன. சிலிப்பர் கட்டடைகள் தொடர்பாக நிறுவனத்தின் சான்றிதழின் அடிப்படையில் மாத்திரம் நடவடிக்கை எடுத்து இக்கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், சிலிப்பர் கட்டைகள் தரம் தொடர்பாக ஏற்றுக்கொள்ளக்கூடிய பரீட்சித்தல் முறைமையொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) நானுஓய மாவட்ட பொறியியல் அலுவலகத்தின் கட்டிடப் பிரிவின் நேரப் பத்திரங்கள் மாதிரியொன்று பரிசோதனையின் போது அந்நேரப் பத்திரங்களில் வேலை அறிக்கை பூர்த்தி செய்யப்படாமல் மேலதிக நேரம் மற்றும் பிரயாண்

செலவினமாக மொத்தம் ரூபா 127,338 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4.16 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------------

இலங்கை புகையிரத திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்ற விதத்தில் இருந்தன. அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவைக்கு விதிவிலக்கானவை**

------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கவசத்திற்காக நிலத்திற்கடியில் கேபல் (Armored Under Ground Cable) 2x1.5 mm) 57 மீற்றருக்காக ரூபா 6,208,440 தொகை செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இக்கொள்வனவு அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மிகவும் போட்டி அடிப்படையில் கூறுவிலை கோராமல் அக்கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி 07 பகுதிகளாக பிரித்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ii) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.3 வழிகாட்டியின் பிரகாரம் ரூபா 5 மில்லியனை விஞ்சிய கொள்வனவிற்காக அமைச்சின் கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள்பபட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை திணைக்கள கொள்வனவுக் குழுவின் அங்கீகாரத்தின் பேரில் 03 சந்தர்ப்பங்களின் போது ரூபா 5 மில்லியனை விஞ்சி ரூபா 28,117,978 தொகை செலவு செய்து 03 உருப்படிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(iii) 40 S 8 Class Radiator Elements அலகுகள் ரூபா 16,576,000 இற்கு கொள்வனவு செய்யும் போது அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்படாமல் 04 சந்தர்ப்பங்களில் 10 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(iv) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 1.2.1(ஈ) வழிகாட்டலின் பிரகாரம் தகைமையுடைய அக்கரை செலுத்தும் தரப்பினருக்கு கொள்வனவிற்கு சமூகமளிப்பதற்கு நியாயமான மற்றும் கூடிய சந்தர்ப்பங்கள் வழங்கப்பட

வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யாமல் காணி மற்றும் புகையிரத கட்டிடங்கள் புகையிரத திணைக்களத்திடமிருந்து குத்தகையாளரொருவரால் மாதாந்தம் ரூபா 20,000 இற்கு பெற்றுக்கொண்ட வளமொன்று மீண்டும் அக்குத்தகையாளரால் உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அவரால் அந்த உப குத்தகைக்கு வழங்கிய தரப்பினரிடமிருந்து அதற்காக ரூபா 250,000 ஆன முற்பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், ரூபா 20,000 வீதம் மாதாந்தம் அக்கட்டிடம் 02 தரப்பினருக்கு உப குத்தகை வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(v) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவை 6.2.2 வழிகாட்டலின் பிரகாரம் சர்வதேச ரீதியில் கொள்வனவு செய்யும் போது போட்டி கூறுவிலை கோரலுக்காக குறைந்தது 42 நாட்கள் காலம் வழங்கப்பட வேண்டிய போதிலும், 05 வெளிநாட்டு கொள்வனவுச் சந்தர்ப்பங்களின் போது ரூபா 163,833,576 இற்குரிய கொள்வனவு அறிவித்தல், விண்ணப்பத்தை பொறுப்பேற்கும் இறுதி திகதயோ அல்லது பின்னரோ கிடைத்திருந்ததாக அவதானிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 1.2.1(இ) வழிகாட்டலின் பிரகாரம் அக்கரை செலுத்தும் தரப்பினர்களுக்கு சமூகமளிப்பதற்கு நியாயமான, சமமான மற்றும் கூடிய சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(vi) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.4 வழிகாட்டலின் பிரகாரம் சந்தை விலை ஒப்பீட்டு முறைமையின் கீழ் கூறுவிலை கோராமல் அவசர கொள்வனவின் கீழ் ரூபா 256,145 ஆன பொருட்கள் 2014 மே மாதத்தின் போது கொள்வனவு கொள்வனவு செய்யப்பட்டு முற்பண உறுதிச்சீட்டுக்கள் மூலம் அத்தொகை தீர்வு செய்யப்பட்டிருந்தது. நிதிப் பிரகாரம் 139 இன் பிரகாரம் கொடுப்பனவு செய்யும் போது குறித்த பொருட்கள் களஞ்சியத்திற்கு கிடைத்ததாக உறுதிப்படுத்தல் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vii) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.4 வழிகாட்டலின் பிரகாரம் சந்தை விலை ஒப்பீட்டு முறைமையின் கீழ் திணைக்கள கொள்வனவு அங்கீகாரத்தின் கீழ் ரூபா 2 மில்லியனிற்கு குறைந்த பொருட்கள் சேவைகள் பெற்றுக்கொள்வதற்கு குறைந்தது 05 முத்திரையிடப்பட்ட விலை கோரல்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், ஒரு வழங்குனரின் விலையை அடிப்படையாகக் கொண்டு ரூபா 1,593,874 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்ய்பபட்டிருந்தன.

(viii) ஒப்பந்த நிபந்தனையின் 4.4 பிரிவு (B) மற்றும் (C) இன் பிரகாரம் ஒப்பந்தக்காரரால் உப ஒப்பந்தம் வழங்குவதற்கு பொறியியலாளரின் ஆரம்ப அங்கீகாரம் மற்றும் உப ஒப்பந்த வேலை ஆரம்பிப்பதற்கு 28 நாட்களுக்கு முன்னர் அதற்காக அறிவிக்க வேண்டிய போதிலும் சமிக்ஞை முறைமை ஸ்தாபித்தல், கட்டிட நிர்மாணத்திற்காக 2014 யூன் மாதம் இறுதியில் ஒப்பந்தக்காரருக்கு 2,483,124 அ.டொ செலுத்தப்பட்டிருந்த போதிலும், உப ஒப்பந்தம் வழங்குவதற்காக எழுத்துமூல அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.17 நட்டமும் இழப்பும்

-------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) வ.ஆ/பொது/2011/05 ஆம் இலக்க புகையிரத பொது முகாமையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் புகையிரத கடவைகளில் பொருத்தப்பட்டுள்ள பாதுகாப்பு கடவைகளுக்கு நட்டத்தை ஏற்படுத்திய தரப்பினரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 100,000 தொகையொன்றை நட்டத்தை ஏற்படுத்திய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தலைமையலுவலக பேரேட்டின் பிரகாரம் புகையிரத நிலையத்திற்கு வழங்கப்பட்டதாக பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் புகையிரத நிலையத்திற்கு கிடைக்கப்பெறாத ரூபா 595,000 பெறுமதியான 9000 நுழைவுச்சீட்டுக்களின் பெறுவனவை குறித்த புகையிரத நிலையத்தின் இருப்பு பதிவேட்டில் பதிவு செய்ய்பபட்டிருக்கவில்லை.

(இ) 1987 இன் சனவரி 05 ஆந் திகதிய 887 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் வீட்டு வாடகை திருத்தம் செய்யப்படாமல் 03 உப திணைக்களங்களுக்குரிய 145 விடுதிகளிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1,930,076 தொகை அரசிற்கு இழக்கப்பட்டிருந்தது.

(ஈ) 03 சந்தர்ப்பங்களில் புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான ரூபா 940,357 பெறுமதியான ஆதன்ஙகளுக்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக இலங்கை பொலிசிற்கு முறைப்பாடு செய்யாமல் புகையிரத பாதுகாப்பு பிரிவிற்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்நட்டங்களை ஏற்படுத்திய நபர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு

நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் கணக்காய்வு திகதியான 2015 மே 31 இலும் அத்தகைய நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) திருகோணமலை கட்டிட பரிசோதகர் அலுவலகத்திற்கு 527258, 527259 மற்றும் 527263 பொருள் விண்ணப்பப்பத்திர இலக்கங்களின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 12,668 ஆன திரவியங்களைப் பயன்படுத்தி நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றியதாக உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அந்நட்டங்களை அறவிடுவதற்கும் உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நாவலப்பிட்டி கட்டிட பரிசோதகர் அலுவலகத்திற்குரிய 102 ஆவது உத்தியோகபூர்வ விடுதியின் 82,445 சதுர அடி அளவிலான காணி உத்தியோகத்தர்களுக்கு குத்தகைக்கு வழங்காமையால் அந்த உத்தியோகபூர்வ இல்லங்கள் அழிவடையும் நிலைமைக்குட்பட்டிருந்தன. அந்த உத்தியோகபூர்வ இல்லங்களில் ஓடுகள், கதவு மற்றும் யன்னல்கள்உட்பட பெறுமதியான ஆதனங்கள் திருடர்களால் கலற்றி அகற்ப்பட்டிருந்ததுடன், அந்நட்டம் தொடர்பாக நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) அம்பலாங்கொடை புகையிரத நிலைய அதிபரால் 2009 ஒக்தோபர் மாதத்திலிருந்து 2015 மார்ச் மாதம் வரை சேகரிக்கப்பட்ட நாளாந்த வருமானம் ரூபா 121,735 தொகை பிரதான கணக்காளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) வெளிநாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட ரூபா 77,040,268 இற்கு பெறுமதி மதிப்பிடப்பட்ட பொருட்கள் 2013 மே மாதத்தின் போது துறைமுகத்தில் ஏற்பட்ட தீயினால் பொருட்கள் அழிவடைந்திருந்தது. அது தொடர்பாக ஆரம்ப பரிசோதனையொன்று மேற்கொண்டு நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் உரிய நட்டத்தைஅறவிடுவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) காலாவதியான மற்றும் பயன்படுத்தப்படாத பொருட்களால் ஏற்பட்ட நட்டமாக ரூபா 13,829,758 ஆன மீதிகள் வருடக் கணக்காக தொடர்ந்தும் நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது. அம்மீதியை பதிவழிப்பதற்காக உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.18 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) வியாங்கொடை புகையிரத நிலையத்திற்கு அண்மையில் அமைந்துள்ள 08 கடைகள் 2007 ஆம் ஆண்டிலிருந்து மூடப்பட்டிருந்ததுடன் அவற்றின் மின் இணைப்புக்களைத் துண்டிக்காமல் மின்சாரத்திற்காக நிலையான கட்டணமாக கணக்காய்வு திகதியான 2014 நவம்பர் 30 இல் உள்ளவாறு ரூபா 259,233 தொகையை கொடுப்பனவு செய்ய நேர்ந்திருந்தது.

(ஆ) ஒரே வழங்குனரின் 02 கூறுவிலைகளின் கீழ் RD/33/1/1 ஆம் இலக்க உருப்படியொன்று பொருள் தேவைப்பாடு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொள்வனவு எல்லையை மிகைத்து 02 சந்தர்ப்பங்களில் அதாவது 2010 அலகுகள் மற்றும் 303 அலகுகள் வீதம் பகுதியாக்கப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டமையால் ரூபா 560,790 ஆன நட்டமொன்று அரசிற்கு ஏற்பட்டிருந்ததாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) வெளிநாட்டிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் துறைமுகத்திலிருந்து உரிய நேரத்தில் விடுவிக்காமையால் மீளாய்வாண்டின் முதல் காலாண்டில் மாத்திரம் ரூபா 1,287,679 மில்லியன் தாமதக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு களஞ்சிய உப திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஈ) SRS(C)RG 3188/10 கோவை மூலம் 02 சந்தர்ப்பங்களில் ஒரே இருப்புக்கள் RG/8/10/83 என்ற இலக்கத்தின் கீழ் 100 அலகுகளும் RG/8/10/82 மூலம் மேலும் 100 அலகுகளுமாக கொள்வனவு செய்யும் போது நாணயமாற்றுவிகிதம் வேறுபட்டதன் பேரில் ரூபா 369,308 ஆன நட்டமொன்று அரசிற்கு ஏற்பட்டிருந்தது.

(உ) ஒரே உத்தியோகத்தர்களைக் கொண்டிருந்த கேள்விச் சபையினால் 2014 திசெம்பர் 17 ஆம் திகதி நடைபெற்ற கேள்விச் சபை கூட்ட இலக்கம் 97 இன் மூலம் 120 O Rings P/No – 70042906000 (MTU Germany) இருப்பு உருப்படி அலகுகள் வீதம் 02 சந்தர்ப்பங்களின் போது 02 நிறுவனங்களிடமிருந்து 60

அலகுகள் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டதால் ரூபா 27,600 ஆன நட்டமொன்று அரசிற்கு ஏற்பட்டிருந்தது.

(ஊ) 2014 ஜனவரி மாதம் முதல் யூன் மாதம் வரையான காலப்பகுதியில் 33 வாகனங்களுக்குரிய வருமான அனுமதிப்பத்திரங்களை உரிய காலப்பகுதியில் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளாமையால் ரூபா 40,800 ஆன தண்டப்பணம் சிக்கனமற்ற விதத்தில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(எ) புகையிரத நிலைத்திலுள்ள பாரம் நிறுக்கும் தராசுகளை இலத்திரனியல் தராசுகளாக மாற்றுவதற்காக ரூபா 2,803,915 தொகையான செலவினம் 38 சந்தர்ப்பங்களின் கீழ் மேற்கொள்ளபட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் போது ஒரே இருப்பு இலக்கம் (1/01/16) 02 சந்தர்ப்பங்களில் இரண்டு விலை விபரங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டமையால் நிறுவனத்திற்கு ரூபா 5,478,186 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 4.19 முகாமைத்துவ நலிவுகள்

-----------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரத்மலானையில் அமைந்துள்ள 680 புகையிரத உத்தியோகபூர்வ வீடுகளுக்காக வேறாக நீர்மானிகள் பொருத்தப்படாமல் திணைக்களத்தின் பிரதான நீர் வழங்களிலிருந்து நீர் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட நீருக்காக ரூபா 58,490,539 தொகை திணைக்களத்தால் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) திணைக்களத்திற்கு கிடைக்கப் பெறும் முறைப்பாடுகள் தொடர்பாக தாமதிக்காமல் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் கொழும்பு மற்றும் நாவலப்பட்டிய போக்குவரத்து அத்தியட்சகர் அலுவலகத்திற்கு 2001 ஆம் ஆண்டிலிருந்து 2014 நவம்பர் மாதம் வரை சமர்ப்பிக்கப்பட்ட 154 முறைப்பாடுகள் மற்றம் 2011,2013 மற்றும் 2014 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக ஒழுங்காற்று நடவடிக்கையோ அல்லது சட்டரீதியான நடவடிக்கையோ எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அரச உத்தியோகத்தர்களால் விண்ணப்பிக்கப்பட்டு உரித்துக் கோராத முப்பத்தைந்து பருவகால சீட்டுக்கள் மீண்டும் பயன்படுத்தப்படாத முடியாத படி இரத்துச்செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுமதி ரூபா 34,290 என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அந்நுழைவுச் சீட்டை இரத்து செய்யும் செயற்பாட்டில் பல்வேறு முறைக்கேடுகள் இடம் பெறுவதற்கு அடமுள்ளதாக கணக்காய்வின் டீபாது அவதானிக்கப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியின் போது நுகேகொடை, புகையிரத நிலைய வளவில் பேணிச் செல்லப்படல் வியாபார நிலையங்களுக்காக அறவிடப்பட வேண்டிய குத்தகை வாடகை ரூபா 2,713,912 ஆக இருந்தது. அது 2013 மற்றம் அதற்கு முன்னைய ஆண்டிற்காக ரூபா 439,535 உம் மீளாய்வாண்டிற்காக ரூபா 2,274,377 ஆக இருந்தது. அக்குத்தகை ஒப்பந்தம் 5 ஆண்டுகளால் நீடிக்கப்பட்டிருந்தது. அதற்காக புதிய குத்தகை ஒப்பந்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2013 ஜனவரி மாதத்திலிருந்து 2014 யூலை மாதம் வரையான வங்கிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த வங்கி தவறுதலாக செலவு வைத்த ரூபா 15,967 வட்டியை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிர்வாகத்தில் காணப்பட்ட நலிவுகள் காரணமாக மீளாய்வாண்டின் ஆகஸ்ட் மாதத்திற்காக ஒரு நபருக்கு குருணாகலையிலிருந்து கொழும்பு கோட்டை வரையான ரூபா 770 பெறுமதியான மும்மாத நுழைவுச் சீட்டும், ரூபா 2310 மற்றும் ரூபா 4320 பெறுமதியான 02 மும்மாத நுழைவுச் சீட்டுக்களுமாக 03 நுழைவுச்சீட்டுக்காக திணைக்களத்தின் பருவகால நுழைவுச்சீட்டு பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட அறிவிப்பின் பின்னர் குருணாகலை புகையிரத நிலைய அதிபரால் வழங்கப்பட்டிருந்தன.

(எ) மீளாய்வாண்டின் சனவரி மாதத்தில் புகையிரத பொது முகாமையாளரின் சேகரிப்புக் கணக்கிற்கு நேரடி செலவு வைத்தல்களாக ரூபா 101,737,860 செய்யப்பட்டிருந்ததுடன் அப்பணத்தின் சரியான தன்மையை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) தலைமையக நுழைவுச் சீட்டுப் வழங்கல் பிரிவின் மூலம் கொட்டாவ புகையிரத நிலையத்திற்கு கொட்டாவ – நாரஹேன்பிட்டிய III ஆம் வகுப்பு அச்சிடப்பட்ட ஒரே தொகுதி இலக்கத்தைக் கொண்ட அச்சீட்டு

நுழைவுச்சீட்டுக்கள் ஒரே பிரயாண முடியும் வரைக்காக முன்னர் வழங்கப்பட்ட நுழைவுச்சீட்டுக்கள் முடிவடைவதற்கு முன்னர் அப்புகையிரத நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்தன. புகையிரத நிலைய அதிபர் பயன்படுத்தப்படுகின்ற இருப்பு அவ்வாற கிடைத்த எந்த தொகுதி இருப்பு என கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாமல் இருந்ததுடன், பல்வேறு முறைகேடுகள் இடம்பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் காணக்கூடியதாக இருந்மை கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஐ) தொடர் இலக்கம் 1000 முதல் 1499 வரையான ஹோமாகம நுகேகொடை 3 ஆம் வகுப்பிற்கு அச்சிடப்பட்ட 500 பருவச்சீட்டக்களின் தீர்மானிக்கப்பட்ட பிரயாணக் கட்டணமான ரூபா 360 இற்குப் பதிலாக ரூபா 480 என அச்சிடப்பட்டு ஹோமாகம புகையிரத நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. குறித்த கட்டணத்தை விட ரூபா 120 அதிகரித்த கட்டணத்துடன் அச்சிடப்பட்டமையால் புகையிரத் நிலைய அதிபருக்கு அதிக கட்டணத்தை அறவிடும் சந்தர்ப்பம் உரித்தாக்கப்பட்டிருந்தது.

(ஒ) இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் வீதி மற்றும் நிர்மாண உப திணைக்களம் (உயர்) உப திணைக்களத்திற்குரிய 07 புகையிரத நிலையங்களிலுள்ள 108 வீடுகள் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஓ) இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் வீதி, நிர்மாணங்கள் மற்றும் போக்குவரத்து உப திணைக்களத்திற்குரிய 14 வீடுகளில் அத்துமீறிய குடியிருப்பாளர்கள் இருப்பதாக அவதானிக்கப்பட்டது. அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையொன்றும் திணைக்களத்தினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் வீதி, நிர்மாணங்கள் மற்றும் போக்குவரத்து உப திணைக்களத்திற்குரிய 08 வீடுகள் குடியிருப்பதற்கு பொருத்தமற்றதாக இருப்பதால் அவ்வீடுகள் தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(க) 2010 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை களஞ்சிய பொருட்கள் இருப்புக் கணிப்பீட்டின் போது அவதானிக்கப்பட்ட ரூபா 1,140,466 பெறுமதியான 51 இருப்பு உருப்படி மிகைகளும் ரூபா 60,110,208 பெறுமதியான 938 பொருள் உருப்படிகள் பற்றாக்குறையினை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கா) புகையிரத நியை பயணச்சீட்டு வருமானமாகக் கிடைத்த பணம் குறித்த திகதியில் பிரதான கணக்காளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் புகையிரத நிலைய பொதுக் கணக்குகளின் பிரகாரம் 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அனுப்பப்பட வேண்டிய ரூபா 52,942 தொகை பல வருட காலமாக அனுப்பப்படாமை தொடர்பில் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கீ) இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த கட்டிடங்களை திணைக்களத்திற்கு அறிவிக்காமல் நவீனமயப்படுத்தப்பட்டு கடைத் தொகுதியொன்றாக மாற்றப்பட்டிருந்தன. அக்கட்டிடத்திற்காக அவர்களால் இலங்கை புகையிரதத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியிருந்த தொகை ரூபா 4,373,645 ஆக இருந்தது. அந்நிலுவைத் தொகையை செலுத்தாதிருக்கையில் அக்கட்டிடங்களின் 10 கடைகளை 10 வெளிநபர்களுக்கு உப குத்தகைக்கு வழங்கி ரூபா 926,000 வைப்பாகப் பெற்றுக்கொண்டு ரூபா 45,650 தொகை மாத்திரம் மாதாந்தம் அறவிடப்படுகின்றதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அது தொடர்பாக எவ்வித நடவடிக்கைளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கீ) உக்குவல புகையிரத நிலைதத்திற்கு அண்மையில் அத்துமீறிய நழைவு வீதியொன்று நிர்மாணிக்கப்பட்டு உக்குவல சிறைச்சாலை உததியோகபூர்வ விடுதி மற்றும் ாணிக்கு நீண்டகாலமாக தனியார் தரப்பினரால் அத்துமீறி பயன்படுத்தப்படுவதாக அவதானிக்கப்பட்டது. அதற்காக எந்தவொரு உடன்படிக்கையொன்றும் இல்லாமல் இருந்ததுடன் கட்டமொன்றும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(கு) வத்துகாமம் பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த காணிக்காக புகையிரத திணைக்களத்திற்கு நிலுவை வாடகையாக ரூபா 709,143 தொகை அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் அக்கட்டிடம் அத்துமீறிய வகையில் வெவ்வேறு வகையான மாற்றங்களை மேற்கொண்டு 10 வேறு தரப்பினருக்கு உப குத்தகையாக வழங்கி மாதமொன்றுக்கு ரூபா 156,000 அளவிலான தொகையொன்றுஅச்சங்கத்திற்கு உழைத்துக் கொண்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

(கூ) மாத்தளை மாவட்டத்தின் 78 கோவைகளைப் பரிசோதித்த போது அப்பிரதேசத்தில் அமைந்துள்ள சில காணிகள் தொடர்பாக மேற்கொண்ட களப் பரிசேசாதனையின் போது அநேகமான காணிகள் அத்துமீறி பயன்படுத்தப்பட்டிருந்ததாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 5.1 மில்லியன் வர வருமானமொன்று கிடைக்க வேண்டியதாக இருந்ததுடன் அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கெ) பளையிலிருந்து வரை காங்கேசன்துரை வரை புகையிரத பாதை நிர்மாணச் செயற்திட்டம் 2014 யூன் 13 ஆந் திகதி பூர்த்தி செய்து கையளிக்க வேண்டிய போதிலும், 2014 செப்தம்பர் 03 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டோ அல்லது காலமும் நீடிக்கப்பட்டிருக்கவில்லை. மாவட்டபுரத்திலிருந்து காங்கேசன்துரை வரையான தரைப்படை அதிணயர் பாதுகாப்பு வலயத்தில் 02 கி.மீ அளவிலான நிர்மாணம் தாமதமானமையால் முழு செய்திட்டத்தையும் பூர்த்தி செய்வதில் உள்ள தாமதம் தொடர்பாக முறையாக முகாமைத்துவும் தீர்மானம் எடுத்திருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக மண் மற்றும் குருணிக் கற்கள் வழங்கும் பொறுப்பும் முறையாக செயற்திட்ட பதவியணியினரால் நிறைவேற்றப்படாததன் காரணமாக 08 மாதங்கள் அளவில் தாமதமொன்று இருந்ததாக அவதானிக்கப்பட்டது.

(கே) செயற்திட்டத்தில் மிகை மதிப்பீடு செய்யப்பட்டமையால் ரூபா 374,189,504 பெறுமதியான தண்டவாளங்களும் சிலிப்பர் கட்டைகளும் எஞ்சியிருந்தன. ஏற்கனவே காணப்படும் பாதைகளை நவீனமயப்படுத்துவதற்காக அவற்றைப் பயன்படுத்துவதற்கு மாற்றுவழியை இனங்கண்டுள்ளதாக புகையித பொது முகாமையாளர் பதிலளித்திருந்தார். எனினும் அவை 2015 மே 31 ஆந் திகதி வரை வரையிலும் இனங்காணப்பட்ட மாற்றுவழிகளுக்காக பயன்படுத்தப்படாதிருந்ததுடன், செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், 09 மாதங்களுக்கு அண்மித்த காலமாக மாதமமொன்றுக்கு ரூபா 300,000 செலவு செய்து செயற்திட்ட பதவியணியினரின் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

(கை) சமிக்ஞை மற்றும் தொடர்பாடல் செயற்திட்டம் 2014 மே 30 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அளவீட்டுப்பத்திரத்தில் 600 சதுர மீற்றர்களுக்காக 388,000 அமெரிக்க டொலர்கள் உபகரண அறைக்காக வாயிற்கதவினை நிர்மாணிப்பதற்காக 2014 யூன் மாதம் இறுதியளவிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(கொ) இலங்கை புகையிரதத் திணைக்களத்திற்கு வருமானமாக கிடைக்கப்பெறறிந்த ரூபா 1,679,491 ஆன பெறுமதியிலான 26 காசோலைகள் மதிப்பிழந்திருந்தது. அக்காசோலைகளில் நிலுவையாக உள்ள காலஎல்லை 02 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரையான காலப்பகுதியில் காணப்பட்டதுடன், அத்தொகையை அறவிடுவதற்கு இயலுமை ஆராயயப்பட்டிருக்கவில்லை.

(கோ) 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வெளி நிறுவனங்களுக்காக நாத்தப்பட்ட பேரேடுகளில் குறிப்பிடப்பட்ட அனுமதிப்பத்திர வருமானத்தில் நிலுவை மீதிகள் தீர்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கைககள் எடுக்கப்பட்டிருக்கவில்லை அதன் காரணமாக 59 நிறுவனங்களிடமிருந்து திணைக்களத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 3,475,599 ஆன வருமானம் 2014 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் நிலுவை மீதிகளாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(கௌ) புகையிரதத் திணைக்களத்தில் சேவை புரிந்து ஓய்வுபெற்ற மற்றும் மரணித்த நபர்களுக்குச் செலுத்த வேண்டிய பணிக்கொடைத் தொகையைச் செலுத்துவதற்கு ஓய்வூதிய திணைக்களத்திடமிருந்து கிடைத்துள்ள ரூபா 645,819 பெறுமதியான 11 காசோலைகள் உரிய நபர்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக திணைக்களத்தினன் வங்கிக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(ச) சமிக்ஞை முறைமை ஸ்தாபிப்பதற்காக சாத்தியவள ஆய்வொன்றும் விரிவான ஆய்வொன்றும் இல்லாமல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டமையால் அனுராதபுரம், பளை மதவாச்சியிலிருந்து தலைமன்னார் பகுதியினதும் பளையிலிருந்து காங்கேசன்துறை பகுதியினதும் முறையே அளவீட்டுப்பத்திரத்தின் 17 ஆம் உருப்படி மற்றும் 09 ஆம் உருப்படி என்பவற்றிற்காக 2.43 மில்லியன் அமெரிக்க டொலர்களும் 756,628 அமெரிக்க டொலர்களும் 2014 யூன் மாதம் வரையிலும் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. சில உருப்படிகள் மதிப்பீட்டு எல்லைளை 50 சதவீதத்தினால் மிகைத்திருந்த போதிலும் அம்மிகைக்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(சா) இலங்கை புகையிரத திணைக்களத்திற்குரிய 05 திணைக்களத்திற்குரிய 1024 உத்தியோகபூர்வ விடுதிகளில் எந்தவொரு உத்தியோகத்தரொருவரும் குடியிருக்காமல் வெற்றிடமாக இருந்தன.

(சி) புகையிரத கேட்போர் கூடம் மற்றும் மவுன்ட் மேரி விளையாட்டரங்கு என்பவற்றை ஆரம்பத்திலிருந்து வாடகைக்கு வழங்குவதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை அரச வருமானத்திற்கு செலவு வைக்காமல் புகையிரத சாஹித்திய மற்றும் சமூக நிறுவன கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தன.

## 4.20 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** | **மேலதிக எண்ணிக்கை** |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 212 | 119 | 93 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 464 | 189 | 275 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 7,224 | 4,864 | 2,410 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 12,386 | 10,133 | 2,253 | - |
| (v) | ஏனையோர்(அமைய/தற்காலிக /ஒப்பந்த அடிப்படை) | - | 1,588 | - | 1,588 |
| | மொத்தம் | 20,336 | 16,893 | 5,031 | 1,588 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதியளவில் 5,031 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஏனைய தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்

------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது இலங்கை புகையிரதத் திணைக்களத்தினால் ஏனைய தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள் தொடர்பான விபரமொன்று கீழே காட்டப்பட்டுள்ளது

| | **ஊழியர் வகை** | **எண்ணிக்கை** | ஏனைய தரப்பினர் | விடுவிக்கப்பட்ட காலப்பகுதி ஏனைய தரப்பினர் |
|---|---|---|---|---|
| (i) | மாவட்ட மின் பரிசோதகர் | 01 | போக்குவரத்து அமைச்சு | 2014 ஆகஸ்ட் முதல் |
| (ii) | மாவட்ட போக்குவரத்துப் பரிசோதகர | 01 | - மேற்படி - | - மேற்படி - |
| (iii) | தொழில்நுட்ப உதவியாளர் பல்நோக்கு) | 05 | - மேற்படி - | 2014 திசெம்பர் முதல் |
| (iv) | தொழில்நுட்ப உதவியாளர் | 04 | இலங்கை தரைப்படை தொண்டர் படையணியின் கைப்பந்து அணிக்காக | 2014 ஏப்ரல் 28 முதல் |
| (v) | மோட்டார் வண்டிச் சாரதி | 01 | போக்குவரத்து அமைச்சு | 2014 நவம்பர் 03 முதல் |
| (vi) | அரச முகாமைத்துவ உதவியாளர் | 01 | - மேற்படி - | 2014 ஒக்தோபர் 20 முதல் |

(இ) ஏனைய தரப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட மனித வளங்கள்

------------------------------------------------------------------------------------------------------

இலங்கை புகையிரதத் திணைக்களத்தினால் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் இரண்டு வாப்பு உத்தியோகத்தர்கள் 2008 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

(ஈ) இலங்கை புகையிரதத் திணைக்களத்தில் காஷப்படும் வெறறிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல் திணைக்கள சேவையிலிருந்து ஓய்வுபெறும் உத்தியோகத்தர்கை மீண்டும் சேவையில் ஈடபடுத்தப்பட்டிருந்தனர். விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஊழியர் வகை | எண்ணிக்கை |
|---|---|
| புகையிரத என்ஜின் சாரதி | 10 |
| புகையிரத காப்பாளர் | 48 |
| புகையிரத நிலைய அதிபர் | 10 |
| புகையிரத மேற்பார்வை முகாமையாளர் சேவை | 25 |
| போக்குவரத்து அத்தியட்சகர் | 01 |
| உதவி புகையிரத களஞ்சிய அத்தியட்சகர் | 01 |
| ஆரம்ப தொழில்நுட்ப அலுவலர் (நிர்வாகம்) | 02 |
| தொழில்நுட்ப அலுவலர் (மின் ஒட்டுனர்) | 01 |
| வானிலை எழுதுனர் | 04 |

## 5. தலைப்பு 307 – மோட்டார் போக்குவரத்து திணைக்களம்

### 5.1 கணக்காய்வுச் சான்றுகள் இன்மை

2013 பெப்ரவரி மாதத்திலிருந்து 2015 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் கணக்காய்வு ஐயவினா ‘தகவல்’ கோரும் கடிதங்கள் மூலம் கோரப்பட்ட வாகனங்கள், 597 மோட்டார் சைக்கில்கள், 31,32,60,61,62,64 மற்றும் 65 ஆகிய இலக்கத் தொகுதியின் கீழ் மற்றும் PA ஆங்கில எழுத்து தொகுதியி கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த சகல வாகனங்களின் தகவல்கள், கோவைகள் மற்றும் பதிவேடுகள் திணைக்களத்தினால் வழங்கப்படவில்லை. சில தகவல்கள் அதிகளவு தாமதமாக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தமையால் அது கணக்காய்விற்கு தடையாக இருந்தன.

## 5.2 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளித்தல்

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 07 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு அளிக்கப்பட்டிருந்த பதிலகளைக் கருத்திற் கொண்டதன் பின்னர் தெளிவற்ற, பூரணமற்ற மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 05 கணக்காய்வு ஐய வினாக்கள் தொடர்பாக மீண்டும் கணக்காய்வு ஐய வினாஒன்று வழங்கப்பட்டிருந்தது. அக் கணக்காய்வு ஐய வினாவிற்காக 2015 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 5.3.1 பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 செலவின விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாடு பயன்படுத்தியதன் சேமிப்புக்கள் அச்செலவின விடயங்களுக்குரிய சேமிப்புக்கள் பின்னர் தேறிய ஏற்பாட்டின் 52 சதவீதம் முதல் 70 சதவீதம் வரையான வீச்சளவினைக் கொண்டிருந்தது.

(ஆ) இரண்டு செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 300,000 கூட்டுத்தொகையான ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தன.

(இ) 307-2-1-11-1405 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் புகை வெளியிடலைப் பரீட்சிப்பதற்காக ரூபா 200,000 ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் நிதிப் பிரமாணம் 66 இன் பிரகாரம் அம்முழு ஏற்பாடும் வேறு செலவின விடயங்களிற்கு மாற்றப்பட்டிருந்தன. புகை வெளியிடல் பரிசோதனைக்காக புறம்பான நிதியமொன்று திணைக்களத்தில் செயற்படுத்தப்படும் போதும் புகை வெளியிடல் பரிசோதனைக்காக வேறான செலவின விடயமொன்றின் கீழ் நிதி ஏற்பாடு மேற்கொள்வதற்கான தேவைப்பாடொன்று காணப்படவில்லை.

(ஈ) திணைக்களத்தினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கின் குறிப்பு (i) – நடைமுறையல்லாச் சொத்துக்கள் அசைவு தொடர்பான

அறிக்கை'' – 307-3-2-2101 ஆம் செலவின விடயத்தின் கீழ் சேர்த்தல்களாக ரூபா 371,915 தொகை காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் 2014 ஆம் ஆண்டில் பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் அச்செலவின விடயத்தின் கீழ் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5.4 கட்டுநிதிக் கணக்கு

---------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 ஆண்டுகளை மிகைத்த ரூபா 280,346,778 கூட்டுத்தொயையான 87 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 6000/0000/00/0003/159 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் திணைக்கள மற்றும் திறைசேரி அச்சீட்டுக் குறிப்புக்களின் பிரகாரம் மீதிகளில் ரூபா 186,575 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

## 5.5 வருமானக் கணக்குகள்

----------------------------------------

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற ரீதியில் 03 வருமானக் குறியீடுகளுக்குரிய வருமான மதிப்பீடுகளைத் தயாரித்தல், வருமானங்களைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் போன்ற செயற்பாடுகள் கையளிக்கப்பட்டுள்ளன. அவ்வருமானக் குறியீடுகளுக்குரித்தாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) 10.03.01.00 உடைய வருமானக் குறியீடு - ஆடம்பர மோட்டார் வாகன வரி**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) வருமான மதிப்பீட்டினைத் தயாரிப்பதில் நலிவுகள்**

---

மீளாய்வாண்டிற்காக திருத்திய வருமான மதிப்பீடு ரூபா 1,020,000,000 ஆக இருந்ததுடன், ஆண்டில் சேகரிக்கப்பட்ட மொத்த தேறிய வருமானம் ரூபா 1,114,853,639 தொகை அதாவது திருத்திய வருமான மதிப்பீட்டை விட ரூபா 94,853,639 அல்லது 09 சதவீத அதிகரிப்பொன்றாகும்.

**(ii) நிலுவை வருமானப் பதிவேடு பராமரிக்காமை மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக அறிக்கையிடாமை**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- திணைக்களத்தினால் 1995 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை முறையாக வருமானப் பதிவேடொன்று பேணப்படாதிருந்ததால் முன்னைய ஆண்டுகள் உட்பட மீளாய்வாண்டிலும் அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

- நிதிப்பிரமாணம் 128(2)(இ) பிரகாரமும் 2002 யூலை 17 ஆந் திகதிய 02/2002 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் சுற்றறிக்கையின் 08 ஆம் பிரிவின் பிரகாரமும் நிலுவை வருமானம் தொடர்பான அரையாண்டு அறிக்கை அரச நிதிக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதியொன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், முன்னைய ஆண்டுகள் உட்பட மீளாய்வாண்டின் போதும் திணைக்களத்தினால் நிலுவை வருமானம் தொடர்பான அரையாண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- நிதிப் பிரமாணம் 176(2) இன் பிரகாரம், கிடைக்க வேண்டியிருந்த ஏதேனும் பணத்தை தாமதமின்றி சேகரித்து முறைப்படி அது தொடர்பாக கணக்குகளைக் காண்பிப்பதற்கு எவரேனும் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் தவறினால் திறைசேரியின் பிரதிச் செயலாளரினால் அது தொடர்பாக திறைசேரியின் செயலாளருக்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தொடர்பாக அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(iii) வருமான நிலைமை மீளாய்வு செய்யப்படாமை**

---

2002 யூலை 17 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் சுற்றறிக்கையின் 03 மற்றும் 05 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் வருமானநிலைமையை மதிப்பீடு செய்வதினூடாகவும் காலத்திற்கு காலம் வருமான நிலைமை தொடர்ச்சியாக மீளாய்வு மற்றும் மேற்பார்வை செய்தல் முறையாக மேற்கொள்ளல் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும், வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(iv) ஆடம்பர மோட்டார் வாகன தொடர்பான வரி பதிவேடுகளுக்கு உட்படுத்தல்**

---

ஆடம்பர் வரி அறவிடப்படும் மோட்டார் வாகனங்கள் தொடர்பாக நடாத்திச் செல்லப்படுகின்ற பதிவேட்டை நாளதுவரையாக்கப்படாமையால் நிலுவை வருமானம் எந்தளவு என்பதை கணக்கீடு செய்ய முடியாமல் இருந்தது. அதனால் டீ.ஜீ.எஸ்.ஏ வருமானம் - 2 மாதிரியின் 08 ஆம் இலக்கம் முதல் 14 வரையான நிரல்களில் பெறுமதி ‘‘இல்லை’’ என குறிப்பிடப்பட்டு வருமானக் கணக்கு தயாரிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) 10.03.07.04 ஆம் வருமானக் குறியீடு - மோட்டார் வாகன விற்பனை வரி**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) வருமான மதிப்பீட்டினைத் தயாரிப்பதில் நலிவுகள்**

-------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்காக திருத்திய வருமான மதிப்பீடு ரூபா 68,000,000 ஆக இருந்ததுடன், ஆண்டில் சேகரிக்கப்பட்ட தேறிய வருமானம் ரூபா 51,935,758 தொகை அதாவது திருத்திய வருமான மதிப்பீட்டின் 76 சதவீதமாக இருந்தது. இதன் பிரகாரம் வருமான மதிப்பீடு தயாரித்தல் நடைமுறை ரீதியாகவும் சரியாகவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ii) நிலுவை வருமானப் பதிவேடு பராமரிக்காமை மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக அறிக்கையிடாமை**

------------------------------------------------------------------------------------------------------------------

நிதிப்பிரமாணம் 128(2)(ஈ) பிரகாரம் நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் 2007 யூலை 17 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் சுற்றறிக்கையின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் நிலுவை வருமானம் தொடர்பான அரையாண்டு அறிக்கை அக்கால எல்லை முடிவடைந்ததன் பின்னர் வரும் மாதத்திற்குள் அரச நிதிக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதியொன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் அவ் அறிக்கையையோ நிலுவை வருமானம் இல்லாமல் வெற்று அறிக்கையொன்றோ அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) 20.03.02.14 ஆம் வருமானக் குறியீடு - மோட்டார் போக்குவரத்து அதிகாரச்சட்டத்தின் அறவிடப்படும் கட்டணங்கள் மற்றும் ஏனைய பெறுவனவுகள்**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் வருமானக் குறியீட்டிற்குரிய ஆரம்ப வருமான மதிப்பீடு மற்றும் திருத்திய வருமான மதிப்பீடு முறையே ரூபா 7,450,000,000 மற்றும் ரூபா 7,600,000,000 ஆக இருந்த போதிலும், திருத்திய வருமான மதிப்பீடு, கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 5.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

---

30701 ஆம் விட இலக்க முற்பணக் கணக்குகள் தொடர்பான 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,133,262 ஆக இருந்ததுடன், 02 வருடங்கள் முதல் 26 வருடங்கள் வரையான காலப்பகுதியிலிருந்து நிலவி வரும் அந்நிலுவை மீதிகள் முன்கொண்டு வரப்பட்டிருந்தன. அந் நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவது தொடர்பான பின் தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலைமையில் காணப்பட்டதுடன், அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02 வருடங்கள் தொடக்கம் 26 வருடங்கள் வரையான காலப்பகுதியிலிருந்து நிலவி வரும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்படாதிருந்த மரணித்த மற்றும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 747,716 ஆக இருந்தது.

(ii) ஓய்வூதியம் இடைநிறுத்தப்பட்ட 08 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 670,563 ஆக இருந்தது.

(iii) 02 வருடங்கள் முதல் 26 வருடங்கள் வரையான காலப்பகுதியிலிருந்து நிலவி வரும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்படாதிருந்த வேலை இடைநிறுத்தத்திற்கு உட்பட்டிருந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 747,716 ஆக இருந்தது.

(iv) 13 வருடங்களுக்கு மேற்பட்ட 21 வருடங்களுக்கு குறைந்த காலப்பகுதியிலிருந்து வரும் தீர்க்கப்படாதிருந்த வேலையை விட்டுச்சென்ற மற்றும் பதவியிலிருந்து நீக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 185,388 ஆக இருந்தது.

(v) தனியால் மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்கின் ஆண்டின் இறுதியில் மீதிகளுக்கிடையே வேறுபாட்டை இனங்காணாமல் தொடரச்சியான அதிகரிக்கும் போக்கு அவதானிக்கப்பட்டது. மேலும் 2013 ஆம் ஆண்டின் போதுரூபா 2,177,500 ஆகக் காணப்பட்ட இணங்காத மீதி 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 2,637,566 வரை அதிகரித்த காரணத்தினால் வேண்டுமென்றே அல்லது தவறுதலாக ஊழியர் கடன் மீதிகளை கடன் பதிவேட்டிலிருந்து அகற்றுவதற்கான அல்லது குறைத்துக் காண்பிப்பதற்கான இடரொன்று காணப்பட்டது.

## 5.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

---------------------------------------------------------

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

**விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

------------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 10 அச்சிடல் இயந்திரங்கள் (Mobil Smart terms) 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன.

(ஆ) 2004 ஆம் ஆண்டில் ஜேர்மனியின் ‘ நிறுவனத்திடமிருந்து நன்கொடையாக கிடைக்கப்பெற்ற இயந்திர இருப்பொன்று மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வியந்திரங்களின் பெறுமதி கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.8 இணக்கமின்மைகள்

-----------------------------------

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வுசெய்து காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (அ) சட்டரீதியான ஏற்பாடுகள் | |
| (i) 2009 இன் 08 ஆம் இலக்க மோட்டார் வாகன திருத்த அதிகாரச்சட்டம் | மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் முன் அங்கீகாரம் பெறப்படாமல் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வாகனமொன்றைத் தயாரித்தல், உற்பத்தி செய்தல், ஒன்றுசேர்த்தல், புதிதாக வடிவமைத்தல், பாகங்களாகப் பிரித்தல், மெருகூட்டுதல் அல்லது வடிவமைப்பை மாற்றுதல் போன்றவற்றை மேற்கொள்ளக்கூடாத போதிலும், அதற்கு முரணாக மோட்டார் வாகனங்களை மாற்றுதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ii) 2009 இன் 08 ஆம் இலக்க மோட்டார் வாகன திருத்த அதிகாரச்சட்டத்தின் 124(அ) | திணைக்களத்தினால் ''சாரதி அனுமதிப்பத்திர நிதியமொன்று'' உருவாக்கப்பட வேண்டிய போதிலும், 2 ஆவது உப பிரிவின் பிரகாரம் சாரதி அனுமதிப்பத்திர அட்டையைப் பெற்றுக்கொள்வதற்காக செலுத்தப்படுகின்ற நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்திலிருந்து ஏதேனும் பகுதியொன்று இந்நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் அவ்வாறான நிதியமொன்று ஸ்தாபிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| (i) | நிதிப் பிரமாணம் 85(2)ஆ | வருமான மதிப்பீட்டை மாற்றுவதற்கு தேவையேற்படுமாயின் அது தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அதற்கான காரணங்களுடன் அது தொடர்பாக பொருளாதார அலுவல்கள் மற்றும் அரச நிதிக் கொள்கை பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தின் வருமாத்தைச் சேகரிக்கும் போது அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணம் 447 | ஒவ்வொரு மாத இறுதியிலும் செலவினப் பேரேடு சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப் பிரமாணம் 880 | அரசாங்கத்தின் பணம், வருமானம், முத்திரை அல்லது பொருட்கள் போன்றவற்றின் பொறுப்பை வகிக்கின்ற உத்தியோகத்தர்களால் பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை. |

## 5.9 செயலாற்றல்

------------------------

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

------------------------------------------------------------------------------------------

திணைக்களத்தால் பிரதான செயற்பாடுகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(i) வாகனங்களின் உரித்தைக் கைளித்தல் போதியளவில் நிறைவேற்றப்படாமை**

---

மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் 12(3)(அ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் வாகனங்களின் உரித்தை மாற்றுவதற்குரிய வாகனங்களின் உரிமையாளர்களால் நிறைவேற்றப்படாத சந்தர்ப்பங்களின் போது திணைக்கள்ததினால் அது தொடர்பாக செயற்படாதிந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

**(ii) சொகுசு வரி அறவிடும் போது போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- நிலுவை வருமானம் தொடர்பாக அறிக்கையிடாமை மற்றும் நிலுவை வருமான சேகரித்தல் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது.

- 1995 ஆம் ஆண்டிலிந்து 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய வரி சேகரித்தல் மற்றும் கிடைக்க வேண்டிய வரித்தொகை தொடர்பாக முறையாக அறிக்கை வைக்கப்பட்டிருக்கவில்லை.

- வருமானக் கட்டுப்பாட்டுக் கணக்குகள் பேணப்பட்டிருக்கவில்லை.

- வரி அறவிடும் நடவடிக்கைகளை உரிய பிரகாரம் நிறைவேற்றாத காப்புறுதி நிறுவனங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
- வரிக் கொடுப்பனவை புறக்கணிக்கின்ற வாகன உரிமையாளர்கள் தொடர்பாக அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
- சொகுசு வரி பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் ஒவ்வொன்று காப்புறுதி கம்பனிக்கு வழங்குதல் மற்றும் மீளப் பெற்றுக்கொள்ளல் தொடர்பாக முறையாக இனங்காணக்கூடிய வகையில் அடியிதழ் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(iii) வாகனங்களைப் புதிதாகப் பதிவுசெய்தல் தொடர்பாக போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

---

திணைக்களத்தில் இடம்பெறுகின்ற மோசடியான நடவடிக்கைகள் தொடர்பாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு தொடர்ச்சியாக கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அம் மோசடியான நடவடிக்கைகள் தொடர்பாக துரிதமாக பரிசோதனை மேற்கொண்டு, அந்த மோசடியான நடவடிக்கைகளுக்காக முன்னின்று செயற்படுகின்ற உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் அந்த வாகனங்களின் பதிவினை இரத்துச் செய்தல் என்பன உள்ளடங்கலாக வாகன உரிமையாளர்கள் தொடர்பாக மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

**(iv) மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் செய்ய வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றாமை**

---

மோட்டார் போக்குரவத்து அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- விபத்திற்குள்ளாகிய அல்லது வேறு வகையில் முழுமையாக அகற்றப்பட்ட வாகனங்கள் தொடர்பாக அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வாகனத்தின் பதிவினை இரத்துச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- இரத்துச் செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

- தொடர்ச்சியாக 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திற்குரிய வருமான அனுமதிப்பத்திரம் பெறப்படாத வாகனங்கள் தொடர்பாக

மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- சுனாமி, பயங்கரவாத முயற்சிகளை உள்ளடக்கிய இயற்கையான மற்றும் செயற்கையான விடயங்களின் காரணமாக அனேகமான வாகனங்கள் அழிவடைந்த போதிலும் அந்த வாகனங்கள் தொடர்பாக திணைக்களத்தின் செயற்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

- நாட்டினுள் உள்ளபடியாக ஓடுகின்ற வாகனங்கள் தொடர்பான புள்ளிவிபரத் தகவல்களை இனங்காணக்கூடிய வகையில் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

**(v) வாகனங்களின் மூலக் கோவைகளைப் பாதுகாக்காமை**

---

திணைக்களத்தில் நாளாந்தம் பதிவுசெய்யப்படுகின்ற வாகனங்களின் மூலக்கோவைகளைப் பாதுகாத்து வைத்தல் திணைக்களத்தால் நிறைவேற்றவேண்டிய அத்தியவசிய செயற்பொறுப்பான போதிலும் வாகனங்களின் மூலக்கோவைகள் பாரியளவில் திணைக்களத்தின் பொறுப்பில் காணப்படாமையாலும் காணாமல் போயிருந்தமையினாலும் அதன் அத்தியவசிய செயற்பொறுப்புக்கள் திணைக்களத்தால் போதியளவில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(vi) நாளதுவரையாக ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களின் பதிவினை இரத்துச் செய்தல்**

---

திணைக்களத்தால் நீண்டகாலமாக ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களின் பதிவினை இரத்துச் செய்வதற்கு போதியளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களின் இலக்கத்தைப் பயன்படுத்தி சுங்க வரி செலுத்தாது சட்ட விரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட அல்லது தயாரிக்கப்பட்ட வாகனங்களின் தரவுகள் அந்த வாகனங்களுக்குரிய பதிவிற்கு உள்ளாக்கப்பட்டு அல்லது அந்த வாகனங்களை அடையாளம் காணும் இலக்கத்தை ஈடுபடுத்தி பல முறைகேடுகளைச் செய்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மோசடியான வாகனப் பதிவுகள்

மேலும் அதிகரிப்பதற்கும் வாகன வரி வருமானம் போதியளவில் குறைவடைவதற்கும் அவை காரணங்களாக இருந்தன.

**(vii) மோசடியாக மாற்றப்பட்ட வாகனங்களின் சட்டரீதியான நிலைமைக்கு உட்படுத்தல்**

---

மோசடியாக மாற்றப்பட்ட வாகனங்களின் சட்டரீதியான நிலைமைக்கு உட்படுத்துவதற்கு 2012 ஒக்தோபர் 16 ஆந் திகதிய 12/1490/538/036 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரம் மற்றும் 2013 சனவரி 03 ஆந் திகதிய அந்த அங்கீகாரத்தின் பிரகாரம் 2013 மார்ச் 31 ஆந் திகதியின் பின்னர் இவ்வாறு மாற்றப்படுகின்ற வாகனங்கள் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கு இடமளிக்கப்படாதிருந்ததுடன், அத்திகதியின் பின்னர் பதிவு செய்யாத மாற்றப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்துகின்ற நபர்களுக்கு எதிராக சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென அமைச்ரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சட்டத்திற்கு முரணாக மாற்றப்படுகின்ற மோட்டார் வாகனங்கள் இலகுவாக பயன்படுத்தப்படுகின்ற போதிலும் அந்த நபர்கள் தொடர்பாக சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(viii) சட்டத்திற்கு முரணாக மாற்றப்பட்ட வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படாமை**

---

வீதியில் ஓடுகின்ற வாகனங்கள் தொடர்பாக தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது மாற்றப்பட்ட 26 வாகனங்கள் தொடர்பாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளருக்கு சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக மேலும் பாரியளவில் மாற்றப்பட்ட வாகனங்கள் அவதானிக்க கூடியதாக இருந்த போதிலும், மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் படி அவ்வாறான வாகனங்களின் பதிவினை இரத்துச் செய்தல், வருடாந்த வாகன வருமான அனுமதிப்பத்திரத்தை விநியோகிக்காமைக்கான நடவடிக்கை எடுத்தல் மற்றும் அவ்வாறான வாகனங்கள் தொடர்பான விபரங்களை இலங்கை பொலிஸ் மற்றும் இலஞ்ச ஊழல் விசாரணைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் என்பவற்றை உள்ளடக்கிய மிகவும் இலகுவாக நிறைவேற்றக்கூடிய செயற்பொறுப்புக்கள் திணைக்களத்தால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) திட்டமிடல்**

**வருடாந்த செயலாற்றல் திட்டத்திற்கு இணங்க செயற்படாமை**

திணைக்களத்தினால் 2014 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இலத்திரனியல் மோட்டார் வாகன முறைமையொன்றை ஏற்படுத்துவதற்காக ரூபா 150,000,000 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது இது தொடர்பாக எவ்வித செலவினமொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5.10 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்தன. தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) வர்த்தக வாகனங்கள் புதிதாக பதிவு செய்தல் தொடர்பாக திணைக்களத்தின் கணனி முறைமை மற்றும் சுங்கத் திணைக்களத்தின் கணணி முறைமையின் சுங்கக் குறிப்புக்கள் செய்யப்பட்ட இலக்கங்கள்(Custum Entry Number) இடையே 06 சந்தர்ப்பங்களில் வேறுபாடு காணப்பட்டன.

(ஆ) திணைக்களத்தினால் டிரக் வண்டியாக பதிவு செய்யப்பட்டிருந்த வாகனமொன்று லேன்ட் ரோவர் டிபண்டர் வகை டபள் கெப் வாகனமொன்றாகவும் திணைக்களத்தின் சிங்கள் கெப் வண்டியொன்றாக பதிவு செய்யப்பட்டிருந்த வாகனமொன்று லேன்ட் ரோவர் டிபண்டர் வகை டபள் கெப் வாகனமொன்றாகவும் வண்டியாக மாற்றப்பட்டிருந்தன.

(இ) ஒரே வகையான 02 மிட்ஷுபிஷி வேன்கள் (Mitsubishi Van) KU மற்றும் PG ஆம் இலக்க தொகுதியுடைய இரண்டு வாகன வகுப்புகளின் கீழ் மோட்டார் கார் மற்றும் இரட்டை நோக்கு வாகனங்களாக பதிவுசெய்யப்பட்டிருந்தது. அவ்வாறே பொருள் போக்குவரத்திற்காக இறக்குமதி செய்யப்பட்டிருந்த வேன் வண்டியொன்று KN இலக்க தொகுதியில் மோட்டார் காரொன்றாக பதிவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) “PP” மற்றும் “PX” வரை வாகனங்களை இனங்காணும் ஆங்கில எழுத்துத் தொகுதியின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த இரட்டை நோக்கு செயற்பாட்டு 18 சிங்கள் கெப் வண்டிகள் முறையே இரு நோக்க செயற்பாட்டு வாகனங்கள் ஆடம்பர மோட்டார் லொறி வண்டிகளாக மாற்றப்பட்டிருந்தன.

(உ) மோசடியாக பதிவு செய்யும் நோக்கில் 141 மோட்டார் சைக்கிள்கள் மாத்திரம் இறக்குமதி செய்யப்பட்ட 85 சுங்க குறிப்புக்களிலிருந்து 2577 மோட்டார் சைக்கிள்கள் இற்க்குமதி செய்யப்பட்டதாகவும் எந்தவொரு மோட்டார் சைக்கிளொன்றும் இறக்குமதி செய்யப்படாத 7 சுங்க குறிப்புக்களிலிருந்து 2098 மோட்டார் சைக்கில்கள் இறக்குமதி செய்ப்பபட்டதாக திணைக்களத்தின் கணனி முறைமைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

(ஊ) சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட அல்லது பகுதிகள் ஒன்றாக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் பாரியளவில் நாளாந்தம் மோசடியாக திணைக்களததில் பதிவு செய்யப்படுவதன் மூலம் அரசிற்கு பாரியளவு வரி வருமான இழப்பொன்று இழக்கப்பட்டிருந்ததுடன், 2014 யூன் மாதத்தில் 05 நாட்களுக்குள் அவ்வாறான பதிவு செய்தல் 108 இடம்பெற்றிருந்தன.

(எ) K ஐ எழுத்தைக் கொண்ட வாகனங்களை இனங்காணும் எழுத்து தொகுதியின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டிய 13 மோட்டார் கார்கள் திணைக்களத்தினால் “PP” மற்றும் “PY” வரையான வாகனங்களை இனங்காணும் எழுத்து தொகுதியின் இரட்டை செயற்பாட்டு சிங்கள் கெப் வண்டியாக பதிவு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) K எழுத்தைக் கொண்ட வாகனங்களை இனங்காணும் எழுத்து தொகுதியின் கீழ் செய்யப்பட வேண்டிய 4 மோட்டார் கார்கள் “PA” மற்றும் “PM” வரையான வாகனங்களை இனங்காணும் எழுத்து தொகுதியின் டபள் கெப் வண்டி மற்றும் வேன் வண்டிகளாக பதிவு செய்யப்பட்டிருந்தன.

(ஐ) K எழுத்தைக் கொண்ட வாகனங்களை இனங்காணும் எழுத்து தொகுதியின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டிய 04 மோட்டார் கார்கள் “L” எழுத்து தொகுதியின் கீழ் மோட்டார் லொறியாக பதிவு செய்யப்பட்டிருந்தது.

(ஓ) மோட்டார் சைக்கிள் மற்றும் ஏனைய பொருட்கள் வகையில் இறக்குமதி செய்யப்பட்டிருந்த சுங்கக் குறிப்புக்கள் மோசடியாகப் பயன்படுத்தப்பட்டு ' டொயோயாட்டா, பிராடோ, மேர்சிடஸ் பென்ஸ் உட்பட 10 அதி சொகுசு மோட்டார் வண்டிகள் மற்றும் வேறு வகையான 26 மோட்டார் வாகனங்களும் பதிவு செய்யப்பட்டிருந்தன.

(ஓ) நடமாடும் கண் சிகிச்சை வேன் (Mobile Eye clinic van) நடமாடும் செயலமர்வு வேன் (Mobile workshop van) என விசேட நோக்கங்களுக்காக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களுக்காக இறக்குமதியாளர்களால் இலங்கை சுங்கத்திற்கு இறக்குமதி ஆவணங்களுடன் சமர்பபிக்கும் போது அவை சாரதீ கூடு தவரி வாகனத்தின் எஞ்சிய பகுதி முழுமையாக குறித்த விசேட நோக்கங்களிற்காக தயாரிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டு சுங்க வரி குறைவாகச் செலுத்தி விடுதலை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதில் வேன் வண்டியின் இருக்கைகளின் அளவு 05 மற்றும் 07 எனக் குறிப்பிடப்பட்டு இரட்டை நோக்கு செயற்பாட்டு வாகனங்களாக திணைக்களத்தில் பதவு செய்யப்பட்டிருந்த 22 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

## 5.11 **நிதி முறைகேடுகள் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட மோசடித் தன்மையிலான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) PV மற்றும் ஆங்கில எழுத்து தொகுதியின் கீழ் முறையே டிரக் வண்டியொன்று மற்றும் சிங்கல் கெப் வண்டியொன்றுமாக திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த வாகனங்கள் பௌதீக பரிசோதனையின் போது லேண்ட் ரோவர் டிபண்டர் வகை கெப் வண்டியாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இவ்வாகனங்கள் குறைந்த சுங்க வரி செலுத்த வேண்டிய சுங்க குறிப்பு இலக்கத்தின் கீழ் விசேட பணிக்கான வாகனமாக இறக்குமதி செய்யப்பட்டு பின்னர் ஆடம்பர கெப் வண்டியாக மாற்றப்பட்டிருந்தது.

(ii) 8705 ஆம் இலக்க சுங்க குறிப்பின் கீழ் விசேட பணிக்கான வாகனமாக குறைந்த சுங்க வரி செலுத்தி விடுவிக்கப்பட்டிருந்த 22 இரட்டை நோக்க வேன்களாகவும் 56 வாகனங்கள் லொறிகளாகவும் பதிவு செய்யப்பட்டிருந்தன

(iii) சிங்கல் கெப் வண்டியொன்றாக திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு பின்னர் ஜீப் வண்டியாக மாற்றப்பட்டிருந்த 18 வாகனங்களிலிருந்து ஆடம்பர வரியாக ரூபா 4,320,000 தொகை அறவிடப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) சுங்க குறிப்புக்களின் பிரகாரம் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த மோட்டார் சைக்கில்களின் எண்ணிக்கை மற்றும் விபரங்கள் சுங்கத் திணைக்களத்தின் கணனி தகவல் முறைமையுடன் ஒப்பிடும் போது திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்டிருந்த பயன்படுத்தப்பட்ட 108 மோட்டார் சைக்கில்கள் சட்டரீதியாக வரி செலுத்தி இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களாக கண்டறியப்படவில்லை.

## 5.12 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

திணைக்களத்திற்குரிய 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடங்கியிருந்த கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக திணைக்களத்தினால் பூர்த்தி செய்யப்படாத பந்திகளுக்குரிய தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடனான தொடர்பு** | | **தொடர்புடைய விடயம்** |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2012 | 12-இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ, க, கா, கி, கீ, கு, கூ, கெ, | நிதி மோசடியான வடிவிலுள்ள கொடுக்கல் வாங்கல்கள் |
| 2012 | 8-இ-(i), (ii), (iii) | செயலாற்றல் |
| 2012 | 10அ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ | சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் |
| 2012 | 11-(இ), (ஈ) | முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் |
| 2013 | 1.10 அ, ஆ,இ, ஈ,உ,ஊ | மோசடியான வடிவிலுள்ள கொடுக்கல் வாங்கல்கள் |
| 2013 | 1.12 ஈ,உ,ஊ, எ,ஏ,ஐ | முகாமைத்துவ நலிவுகள் |

## 3.12 முகாமைத்துவ நலிவுகள்

-----------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் உரிய அங்கீகாரம் பெறப்படாமல் மோட்டார் வாகனங்களை தயாரித்தல், உற்பத்தி செய்தல், ஒன்றுசேர்த்தல், புதிதாக வடிவமைத்தல், பாகங்களாகப் பிரித்தல், மெருகூட்டுதல் அல்லது வடிவமைப்பை மாற்றுதல் செயற்பாடுகளை உள்ளடக்கிய மோட்டார் வாகனங்கள் தொடர்பாக ஏற்படுகின்ற பல்வேறு பிழையான செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற நபர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதை நோக்காகக் கொண்டு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் வெகுமதி மற்றும் ஊக்குவிப்புப்படி நிதியமொன்று உருவாக்கப்பட்டிருந்தது. இந்த நிதியத்திற்காக மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் கீழ் அறவிடப்படுகின்ற கட்டண வருமானத்தில் 1 சதவீத அளவு ஒவ்வொரு வருடமும் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் வெகுமதி நிதியத்தின் மூலமான கணக்காய்வு அவதானிப்புக்களிலிருந்து காண்பிக்கப்பட்ட முறையற்றவகையில் மாற்றப்பட்ட வாகனங்களை இனங்காண்பதற்கும், அது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள முடியுமான போதிலும், அவ்வாறான எவ்வித நடவடிக்கைகளும் இந்த வெகுமதி நிதியத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரச்சட்டத்தின் 18 ஆவது பிரிவின் பிரகாரம் காப்புறுதி நிறுவனங்களிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொண்டு விபத்திற்குள்ளாகி ஓட்டத்திலிருந்து அகற்றபட்ட வாகனங்களின் பதிவினை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்தக் காரணத்தின் அடிப்படையில் இந்த வாகனங்கள் மேலும் ஓட்டத்தில் ஈடுபடுகின்ற வாகனமாக திணைக்களத்தின் தகவல்களின்படி காண்பிக்கப்படுகின்றன. திணைக்களத்தால் நாளதுவரையாக ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களின் பதிவினை இரத்துச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்காததன் காரணமாக இவ்வாறு ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களின் இலக்கங்களைப் பயன்படுத்தி சுங்கவரி செலுத்தாது சட்டரீதியற்ற வகையில் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது தயாரிக்கப்பட்ட வாகனங்களின் தரவுகள் இந்த வாகனங்களுக்கு

உள்ளீர்க்கப்பட்டு அல்லது இந்த வாகனங்களை இனங்காணும் இலக்கத்தை ஈடுபடுத்தி கணிசமான மோசடிகள் மேற்கொள்ளப்படுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(இ) நோயாளர் காவும் வண்டி மற்றும் சவ ஊர்தி போன்ற விஷேடமான நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களைப் பதிவு செய்யும் போது அந்த விஷேடமான நோக்கத்திற்குப் புறம்பாக செல்வதைத் தடுப்பதற்காக போதியளவான / முறையான செயற்பாடுகள் திணைக்களத்தில் காணப்படாமையால பல முறைகேடுகள் இடம்பெற்றிருந்தன. அதன்படி அவ்வாறான வியாபார செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற நிறுவனங்களுக்கு அல்லது நபர்களுக்கு விஷேடமான அனுமதிப்பத்திரத்தின் மூலம் மாத்திரம் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு இடமளிப்பதன் ஊடாக இந்த மோசடிகளைக் குறைப்பதற்கான இயலுமையை கணக்காய்வின் போது சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திணைக்களத்தின் வெளி மாகாண அலுவலகங்களிலிருந்து சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக உரிய விண்ணப்படிவங்கள் பொறுப்பேற்கப்பட்டதன் பின்னர் எழுத்துப் பரிசோதனை நடாத்தி அனைத்து ஆவணங்கள் வெரஹர அலுவலகத்திற்கு அனுப்பியதன் பின்னர் சாரதி அனுமதிப்பத்தரம் அச்சிடப்பட்ட போதிலும், திணைக்களத்தின் கணனி முறைமயிலிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின் பிரகாரம் மாகாண அலுவலக உத்தியோகத்தர்களால் முன் அறிவித்தலுமின்றியும் கவனமாக நடவடிக்கை எடுக்காத காரணத்தினாலும் 2010 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆகஸ்ட் வரை பல்வேறு குறைபாடுகள் காரணமாக 200 சாரதி அனுமதிப்பத்திரங்கள் மாத்திரம் அச்சிட முடியாமல் இருந்ததுடன், திணைக்களத்தினல் இது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.13 மனிதவள முகாமைத்துவம்**

-----------------------------------------

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

-----------------------------------------------------------------------------------------------------------------------

2014 திசெம்பர் 31 அந் திகதியில் உள்ளவாறு பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| பதவியணியினர் வகை | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | - | | | |
| (i) | சிரேஷ்ட நிலை | 27 | 24 | 03 | |
| (ii) | மூன்றாம் நிலை | 21 | 05 | 16 | |
| (iii) | இரண்டாம் நிலை | 790 | 709 | 81 | |
| (iv) | ஆரம்ப நிலை | 127 | 125 | 02 | |
| (v) | ஏனையோர் (ஒப்பந்த அடிப்படை) | - | 02 | - | 02 |
| | மொத்தம் | 965 | 865 | 102 | 02 |

மீளாய்வாண்டின் இறுதியளவிலும் 102 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) உத்தியோகத்தர்களின் உள்ளக இடமாற்றம் தொடர்பான உள்ளக் கட்டுப்பாட்டின் பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 நவம்பர் 30 ஆந் திகதிய 05/2012 ஆம் இலக்க உள்ளக இடமாற்றம் தொடர்பான சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் உத்தியோகத்தர்களுக்கு இடாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) திணைக்களத்தின் மோட்டார் வண்டி புதிதாக பதிவு செய்யும் பிரிவுகள் மற்றும் உரித்தை மாற்றம் செய்யும் பிரிவகள் பல காணப்படுவதால் அப்பிரிவுத் தலைவர்களின் தேவைப்பாடு ஆராயப்படாமல் உள்ளக இடமாற்ற பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்தது.